# NATIONAL HIGH SCHOOL,

# NAGORE.

1309
3-56

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - SEP 1956
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS

2233

# MAGAZINE

## 1956.

## MAGAZINE COMMITTEE.

Sri. M. V. Natesa Iyer, B. A., L. T.,
*Head Master.*

" T. K. Srinivasa Iyengar, B. A., L. T.
*Editor.*

" R. Packirisamy, B. A., B. T.

" Vidwan P. Thillaigovinda Pillai.

" M. Rajagopala Iyer.

# NATIONAL HIGH SCHOOL


## NAGORE.

★

★

# MAGAZINE

## 1956.



STAFF 55-56.

# CONTENTS.

## ENGLISH.


| | |
|---|---|
| Editorial .... .... .... .... | |
| The crest and motto of the school .... .... | 2 |
| A brief history of the school .... .... | 3 |
| Shrines and Temples in and around Nagore .... | 4 |
| Messages .... .... .... .... | 5 |
| Maha Maham festival at Kumbakonam .... | 7 |
| Our trip to Mettur .... .... .... | 9 |
| Science and Modern Life .... .... .... | 11 |
| The Auxiliary Cadet Corps .... .... | 13 |
| Aims of the Auxiliary Cadet Corps<br>The A C. C Activity of our school .... .... | 14 |
| The other activities of our school .... .... | 15 |
| Wise Sayings .... .... .... .... | 16 |


## தமிழ்.


| | |
|---|---|
| நமது பள்ளியின் வாழ்த்து .... .... .... | 17 |
| எங்கள் ஊர் .... .... .... .... | 18 |
| விதியா? சதியா? .... .... .... | 22 |
| மாணவர் கடமை .... .... .... | 25 |
| நான் கண்ட ஜப்பானியர் .... .... .... | 26 |
| நாடகத்தமிழ் .... .... .... .... | 28 |
| இறைஞ்சுகின்றோம் .... .... .... | 31 |
| தமிழ்த் தென்றல் .... .... .... | 33 |
| சில மணிகள் .... .... .... .... | 36 |
| சிந்திப்போம் .... .... .... .... | 40 |
| எங்கள் இன்பச் செலவு .... .... .... | 42 |
| உண்மை நாகரிகம் .... .... .... | 45 |
| பங்கு கொள்வீர் ... .... .... ... | 48 |

# ★ கடவுள் வணக்கம். ★

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ அன்புடைய
மாமனும் மாமியும்நீ

ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ ஒருகுலமும்
சுற்றமும் ஓர்ஊரும்நீ

துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ துணையாய
என்நெஞ்சம் துறப்பிப்பாய்நீ

இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ இறைவன்நீ
ஏறூர்ந்த செல்வன்நீயே.

—திருநாவுக்கரசர்.

**He who has faith has all and he who lacks it lacks all.**

—*Sri Ramakrishna.*

# EDITORIAL

The school has completed its 13th year. A brief history of the school is written on a separate page.

It is our wish that the Magazine should give a true picture of our school life. Articles have been contributed by the the teachers and the students. The Magazine provides ample opportunities to the pupils old and new to express their thoughts in different aspects of the school and life in it.

The Mother land is progressing rapidly after the independence. The pupils of to-day are the citizens of the morrow. So they must play their part to build a greater India. To do this they must be well disciplined and have clear thoughts. They must work hard.

Let us all pull together and strengthen the Institution which has been built after years of labour.

# THE CREST AND MOTTO OF THE SCHOOL.

The Motto of our school is "Love is God" (அன்பே கடவுள்) we know there is no use in uttering the name of God without helping our brethren, who are in distress. We are familiar with ths stories of Abu Ben Adam whose name, stood first in the list as he loved his fellow-men. We also know the story of an old woman who gave a wisp of straw to the bullocks which drew the cart laden with stones for the construction of a temple by a king. God was pleased with this small help rendered by the woman and her name was found written in Gold letters on the tablet of the temple. This reminds us of a verse in Thirukkural which says that the timely help rendered by a man is greater than the world. We must love all beings created by God.

The crest bears a Gopuram on the left, Manora on the right with a cocoanut tree in the centre. Gopuram reminds us of God and His omni presence and omni-potence. It reminds us always of His greatness and splendour.

The Manora of the Durga of Andavar signifies the glory of Andavar. It describes how an ordinary man became great saint and how in his Samadi, people of all religious congregate and worship him. It is the only place in India where all the people irrespective of caste or community meet and worship the great Saint. This leads to the conclusion that all religions lead towards the same God.

In the centre we have the Coconut tree the Kalpaga Vriksham of India. Every part of this tree is useful to us and it is a sacred tree to all of us.

It sets a noble example to us to do service to others at all times.

# A BRIEF HISTORY OF THE SCHOOL.

The school was started in the year 1941, by converting the higher standards of the National Higher Elementary School, Nagore into a Middle school. Thanks to the Public, the Management and the Government, IV form was opened in June 1947 and the other forms in subsequent years. The school caters to the educational needs of Nagore and other surrounding villages.

Suitable sites were selected last year in the heart of the town for constructing school buildings. A storyed building of six rooms was constructed under the Local Development Scheme. The Muslims and Hindus constructed Mangalore tiled sheds to accommodate the classes. The buildings were opened in December last by Sri R. M. Sundaram, Collector of Tanjore. There is vast scope for exapnsion. There is also a play ground adjacent to the school where Badminton, Tennikoit and Volley ball are played.

It may not be out of place here, if I appeal to the philonthropic people of the locality to construct a few more rooms to accommodate craft and hoppy sections and additional sections when opened. The school requires a fully equipped laboratory and library and good furniture for the classes.

It is our fervent prayer that the institution which is in its embroynic stage, may grow from strength to strength and be a source of pride and joy to the town. May its students serve our Motherland to the best of their abilities and conscience.

# SHRINES AND TEMPLES IN AND AROUND NAGORE.

South India abounds in shrines and Temples In our town we have a number of temples. Naganatheeswarar is the presiding deity and Nagavalli is the Amman. The temple is neatly maintained by the Trustee. The presiding deity is said to be a great "Varaprasathi."

Another temple of our town is "Prasanna Venkatachalapathy." The deity is said to be the nearest relative of Lord Venkateswara of Tirupathy. The idol is about four feet height and is very majestic in appearance and awe inspiring. The mantapam built centuries back still defies winds and rains and is a puzzle to the modern Engineers.

We have Mariamman temple and other temples for other Gods.

This place is noted for Hindu Muslim Unity. It is the only place in India where Hindns and Muslims worship in the shrine of Andavar. One who enters the Durgha sees perfect unity between the two communities and he realises that all religions lead towards one God. The festival comes once in a year and is celebrated on a grand scale. Lakhs of devotees from all parts of India, Ceylon, Malaya and other places throng here and have a darsan. The tenth day is the important day when Sandal is smeared on the Samadhi of Andavar It is a very grand sight to see.

There are a number of temples at Nagapattinam. The most important of them are Neelayathakshy, Sattayappar, Mariamman and Kumaran.

A few miles from the place we have famous temples at Tirunallar for Lord Saturn, at Sikkil for Lord Subramaniya, at Tirumarugal and Tiruchattangudi for Lord Siva and at Thirukkannapuram for perumal Appar and Manicka Vachagar have sung in praise of these deities.

How can we forget the famous church at Velanganni which attracts lakhs of pilgrims every year during the holy festival One who visits this place on excursion should also visit these temples and derive mental and spiritual satisfaction.

**M. V. Natesa Iyer,**
Head Master.

Director of Public Instruction,
Madras,
23rd January 1956.

*Dear Mr. Natesa Iyer,*

*I am glad to learn that the first issue of your School Magazine will be published shortly. Schools should offer varied opportunities for creative activity and self-expression and I hope your School Magazine will offer such opportunities, both to the pupils and the staff. I wish this worthy endeavour all success*

Yours faithfully,

*N. D. Sundaravadivelu.*

Nagapattinam,
1—2—1956.

Dear Sir,

On the eve of publishing the school Magazine I send my hearty congratulations to the Staff and pupils for their earnest efforts.

The Magazine is sure to bring out the latest talents of the pupils and will certainly enrich their knowledge.

I wish the venture every success.

Yours faithfully,
A. M. P. Subbaraya Chettiar,
Correspondent,
National High School, Nagore.

# MAHA MAHAM

## FESTIVAL AT KUMBAKONAM.

Kumbakonam the city of temples is situated on the banks of the river Cauvery in Tanjore District. The river Cauvery runs through the heart of the town while Arasalar a branch of the stream flows on the south as though forming a garland. It is also a place of historical importance in as much as it was the summer resort of the Chola Kings of Tanjore. The massive buildings, rich with Chola architecture with imposing towers, stand to this very day on the North bank of the river Cauvery. It is a flourishing municipal town having a population of about a lakh. The town boasts of an Arts College, 4 High Schools for girls. Five High School for boys, a school of Arts and Crafts and a number of elementary schools. It is an industrial town famous for the manufacture of hand-loom goods, silk sarees and brass ware and lead vessels. It is also a rich and flourishing town by virtue of its situation in the heart of the district of Tanjore, the Granary of South India.

There are a number of temples both big and small all over the town, the chief of them being Adhi Kumbaswarar temple, the Sarangapani temple and the Chakrapani temple. Every year the Magam festival is being celebrated in many of these temples, in the Tamil month of Masi. The last day of the festival that is the bathing festival comes on Maham. Once in twelve years the Mahamagam festival is

being celebrated. It is akin to the Kumbhamela at Allahabad and the festival of Pushkaram at Puri. On the Mahamaham day lakhs of people throng to the famous Mahamaham tank to have a sacred dip in the water from early dawn. The tank is about five acres in area, and there are eight wells at the bottom floor. It is said that the river Ganges pays a visit to the tank once in twelve years, on the Mahamaham day, adding to the holiness and sacredness of the place. It is believed that a bath in the tank on the Mahamaham day is as holy as one taken in the Ganges on other days. Hence this festival is important for all Hindus So it is no wonder that vast concourse of people, throng to the place from all over India.

All the visitors are accomodated in Schools, Private buildings and in temporary sheds raised for the purpose Excellent sanitary arrangements are being made. Good protected water supply is made available to all. Exhibitions and other amusement are organised by the municipality throughout the festival. The railways and other transport concerns attend to the comforts of the pilgrims. Poor people are fed by philanthrapic Gentlemen. Scouts will also be doing their selfless service in regulating the crowd and in detecting cases of thefts.

This famous Mahamaham falls on 24—2—1956 this year I eagerly wish to visit the town during the Mahamagam festival and do my bit of service to the pubiic. But I do not know if my desire will be fulfilled in view of the approaching S. S L. C. Examinations.

**R Achuthanarayanan,**

*VI Form.*

# OUR TRIP TO METTUR.

The year 1953 is a memorable one. During the month of August exactly a week before the Independence Day a party of fifteen students and four teachers thronged at Nagore Railway Station Just an hour before noon to go on Educational Excursion to Salem and Mettur. We boarded the train and reached Trichy Junction in the evening. We took our nominal supper and got into the train leaving Trichy at 9 P. M. Reaching Erode we had to wait for more than 2 hours spending our time in the severe cold. As soon as the train bound for Salem arrived we got into it. At last we reached Mettur at about noon. As we had not arranged previously we had to seek lodging in a hotel.

Finishing our meals in the hotel we went to contact the Executive Engineer to get our permits. In spite of the high water level at the Dam he kindly issued us permits. We reached the centre of attraction of our tour - Stanley Dam, at about 1 P. M. Going round the Park we reached the Power house All the four turbines were working at that time and a senior officer explained to us the working of the Powr House. From there we walked straight away to the other end of the Dam. For more than a mile we walked along the cemented path way. It seemed to us as if we were strolling in a dreaem land. On the left we found the beautiful valley shining in the sun beams and on the right the huge wall of the Dam. A feeling of pride passed through our hearts when we thought of the good old days when the massive constuction of the dam was begun. Suddenly we were in the grip of fear for a moment when we thought of

the huge havoc that would he caused should this gigantic wall give way and the still water gush out with great fury to devastate the valley down below. We lost ourselves on gazing at the large sheet of water and the mighty wall which is the fruit of the toils of millions of workers. We can not but thank God for having endowed manwith the skill to harness the powers of Nature to the good of humanity.

We then proceeded to what is called the Governor's Pavillian which is standing on a hillock adjacent to the Dam. We had the final panoramic view of the Stanley Dam and returned to our lodgings. Being quite exhausted we all went to bed early that night The next morning we all took an early bath near the shutters, finished our tiffin and boarded the Salem train The train reached Salem in the early hours of the after-noon We directly went to the Coimbatore lodge and finished our meals Leaving our articles there we all went to witness a matinee show in the Palace theatre. In the evening we explored the town till 9 P. M. There after we commenced our return Journey with full of happy memories and delightful thoughts which can never be effaced from the strong holds of our minds by the years to come.

S. Ahamed Levai,
*V 'B' Section.*

# SCIENCE AND MODERN LIFE.

Now we are living in the age of science. Science has become a part and parcel of man's life. It has produced innumerable miracles. We are able to achieve what our fore fathers could not aim at. In every walk of life there is scientific improvement.

To enumerate the benefits of scientific improvement is a very big task. First of all let us take the problem of agriculture. In olden days primitive methods were used and the yield was poor. Now present day methods of cultivation prove that the modern way of agriculture is superior. What could be done by ten men, can be finished by a tractor.

One of the wonders of science is electri city. A room is dark and if you want to illuminate it, this can be done with in a moment by the help of electricity. The day is hot or cold and you want a comfortable room to work. You can have it by the method of air conditioning We see cricket fans listening to the running commentary of cricket match in a radio. By the turn of a switch we are able to hear the voice from America or London.

Surely science is friend in need. It cures our diseases. The wonderful drug discoverd by Alexander Flemingls-

Penicillin - has come into daily use Diseases liko syphilis, Pneumonia, meningitis etc have been cured by the marvellous effect of this modern drug.

Science has also advanced in a different direction. We are not blind of the devastating effects of science. In days of yore horses, elephants, archers and chariots were used in battles. But now explosive bombs, bombers and torpedoes have been used and the result is destruction. Latest discoveries of atom bombs, hydrogen bombs and cobalt bombs are all capable of annihilating the whole world in a fraction of a second. As a result of the same the human race and civilization are at stake.

Science is not to blame for the dreadful act. Either the scintists are not to be mistaken But the society which uses those weapons is at cross-roads and has to be mended. Let us remember the saying "The noblest form of reveenge is forgiving," often preached by the father of our nation and be worthy of our Bharat Nation.

R. Visalakshi,
*VI Form.*




CONNEMARA PUBLIC LIBRARY
27 NOV 1956
MADRAS

**Intermediate Foot ball District winners 54-55.**



**Senior Badminton Team
Winners in the Inter-Dt. Tournament 55-56.**



A. C C. UNIT

# THE AUXILIARY CADET CORPS.

Youth is the backbone of a nation's strength. It is the youth of to-day who will grow up to be the leader of to-morrow. Leaders are needed to bring fame and laurels to the credit of a nation. It is only good leadership that raises the status of a nation in the eyes of the present day world and brings peace and prosperity to the nation. Many are of the opinion that leaders are born. But it is true to a certain degree. It is also to be noted that one can become a good leader by unselfish streanuous efforts and good training. The Auxiliary Cadet Corps aims at producing good leaders.

India is steadily progressing and is achieving a place of prestige in the eyes of the Nations of the world. India needs its youth to raise its social, economical and cultural standards for its own sake and for the world. The cream of youth is to be found in Schools and Colleges. So it is the desire of the Government of India to impart necessary education and training to the youth to build them into worthy citizens.

The Auxiliary Cadet Corps has been raised to achieve that goal. India has great expectations from younger generations for Her progress and uplift, It is up to them to stand up to the ideals of a welfare state and render all service they can for Her progress.

# Aims of the
# AUXILIARY CADET CORPS.

1. To build up youth mentally. morally and physically and to make them good and disciplined citizens by devoloping their character and capacity for leadership.

2. To develop in them a sense of patriotism.

3. To develop team-spirit, Corporate life, self confidence and train them for social service.

4. To teach them the dignity of labour.

The A. C. C. organisation gives training to the youths under the various heads such as Drill, Physical training (Swimming and Team Games) Elementary First Aid, Sanitation and Hygiene, Leadership, Fire fighting, Crowd control, Marching, Citizenship, Discipline and Social Service.

Keeping in view all the importance of the A C. C. organisation it is expected that every parent, true to his country, will come forward to have his or her sons and daughters enrolled as Cadets of A. C. C. attached to their respective Schools and Colleges as the case may be.

# THE A. C. C. ACTIVITY OF OUR SCHOOL.

A unit of Fifty Cadets has been raised in our school this year. The cadets are given training in Drill, physical exercise and social service. It is indeed a beautiful sight to see the Cadets on March in their uniform. The

unit is functioning well under the guidance of the two A. C. C officers of the school. It is hoped that a good number of boys will join the A. C C. next year.

**Jai Hind !**

**M. Rajagopalan,**
*A. C. C Officer,*
*N. H. S. Nagore.*

# THE OTHER ACTIVITIES OF OUR SCHOOL.

The pupils of the School went on excursion to Madras, Vedaranyam, Tanjore, Odachery last year besides a number of outings. This year they had their turn with about nine assistants of the school to Trivandrum, Cape-Comerin, Thirukkutralam, Madurai, Thiruparankundram, Palni and Thiruchirapalli

Literary Association of the school is doing its very best to draw out the latent talents of pupils. Distinguished educationists are often invited to deliver lectures on various topics

Other activities like cubs, J. R. C. S. and A. C. C. are functioning satisfactorily.

The School won last year in the Inter District Badminton (Fives) and stood first in the District Foot-ball tournament.

# ★ WISE SAYINGS. ★

## NATIONAL HIGH SCHOOL, NAGORE.

★ Nobleness enkindleth nobleness.
★ A Flow of words is no proof of wisdom.
★ To err is human, to forgive is divine.
★ Industry is a load stone to draw all good things.
★ Order is heaven's first law.
★ Necessity is the mother of invention.
★ A rolling stone gathers no mass.
★ Love and business teach eloquence
★ Humbleness is the noblest form of revenge.
★ Idleness is the root of all evil.
★ God helps those who help themselves
★ Happiness is added life, aud the giver of life.
★ Speech is silver, silence is golden.
★ Cleanliness is next to God.
★ Hope is a good breakfast, but it is a bad supper
★ Our days on the earth are as a shadow.
★ Obedience alone gives the right to command
★ Light troubles speak, great troubles are silent
★ No man should command poverty unless he is poor.
★ A civil denial is better than rude grant.
★ Gratefulness is the poor man's payment.
★ Opinion is in good men, but knowledge in the making.
★ Rule your passions or they will rule you
★ Experience is the father of education.

**V. Ramamurthy.**
*N. H. S. Nagore.*

# நமது பள்ளியின் வாழ்த்து.

*அறுசீர் விருத்தம்.*

எங்களின் நாகூர் ஐஸ்கூல் எழிலுற
நாளும் ஓங்கி
கங்குலாம் இருளைப் போக்கும் கதிரவன்
ஒளியே போன்று
எங்கணும் கலையைத் தந்து யாவர்க்கும்
இன்பம் ஈந்து
மங்குரு மதிபோல் என்றும் மாண்புற
வாழ்க மாதோ.

இந்துக்கள் முஸ்லீம் என்ற இருவரும்
ஒன்றே என்று
சந்ததம் எவர்க்கும் காட்டி சத்தினை
உணர்த்து கின்ற
நந்தலில் நாகூர் ஐஸ்கூல் ஞாலங்கள்
உள்ள நாளும்
எந்தம திறைவன் றன்னல் எழிலுற
வாழ்க மாதோ.

# எங்கள் ஊர்.

[M. இராஜகோபாலன், *ஆசிரியர்*]

**"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு."** உலகின் கண் எந்நாடும் சாதித்திராத அரிய பெரிய சாதனைகளை சாதித்த நாடு பாரத நாடு, அண்ணல் காந்தியும் அஹிம்சாமூர்த்தி புத்தரும், கம்பனும் வள்ளுவரும் தோன்றிய நாடு நம் நாடு என்றால் நம் நாட்டின் பெருமையைக் கேட்கவா வேண்டும் இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த நம் நாட்டில் **'எங்கள் ஊர்'** என்றால் தேசாபிமானிகள் அனைவருக்கும் ஓர் புத்துணர்ச்சி எழலாம். மனக்கண் முன்னால் அவரவர்களது ஊர் காட்சி அளிக்கலாம்; பழைய நினைவுகள் எழலாம். எல்லா ஊர்களையும் பற்றி எழுத சாத்தியமில்லையாதலால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழும் நாகூரையே எங்கள் ஊர் எனக்கொண்டு அதனை இங்ஙண் ஆராய்வோம்.

***செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்ப***
***தேன்வந்து பாயுது காதினிலே!***

என்று அமரகவி பாரதியாரால் பாடப்பட்ட தமிழ் நாட்டில் சோழ நாடு என்பது ஓர் பகுதி. "மேதக்க சோழ வளநாடு சோறுடைத்து" என்று ஔவை மூதாட்டியாராலும் போற்றப்பட்டுள்ள சோழ நாட்டில் நாகப் பட்டினம் என்பது கலையிலும். வாணிபத்திலும் சிறந்த பேரூர். அதற்கு வடக்கே மூன்றுகல் தொலைவிலும், வசைக்கவி காளமேகப் புலவரால் பாடப்பட்டு மண்மேடாகக் காட்சியளிக்கும் திருமலைராயன்பட்டினத்துக்கு தெற்கே மூன்று மைல் தூரத்திலும், வெட்டாறு வங்கக்கடலில் கலக்கும் இடத்தில் அமைந்துள்ளது எங்கள் ஊர்—நாகூர். இதற்குப் புந்நாகவனம் என்ற வேறு பெயரும் உண்டு. நாகூரும், நாகையும் ஒரே நகராண்மைக் கழகத்தின் பரிபாலனத்திற்குட்பட்டவையே இவ்விரு ஊர்களுக்கும் பல வகையிலும் நெருங்கிய தொடர்புண்டு நாகை ஓர் துறைமுகப்பட்டினம். வாணிபத்திற்குப் பெயர் போனது பண்டைய நாட்களில் நமது ஊரிலும், எண்ணிறந்த பண்டகசாலைகள் மலிந்திருந்தன. அந்நிய நாட்டு சாமான்களை காரையிலிருந்து தருவித்து வியாபாரம் செய்தனர் எங்கள் மூன்னோர். அந்தோ! அதன் சின்னமாக இப்பொழுது பண்டகசாலைத்தெரு என்றொரு தெரு விளங்கா நிற்கிறது. "நாகூர் பாக்கு" என்று வழங்கப்படுவது நமது பழைய வாணிபத்தின் பெருமையையே உணர்த்துகிறது.

"வந்தவரை வாழ வைக்கும் சிங்கார நாகைக்கு" எங்கள் ஊர் ஒரு உறுப்பாக அமையும். "தீரா நோயையும் தீர்த்து வைக்கும் நாகூர்"

என்று கூறினால் அது மிகையாகாது. இவ்வளவு பெருமைக்குக் காரணமாயிருப்பது எங்கள் ஊர் தர்கா. இங்கு கோயில் கொண்டுள்ள ஹஜரத்து குத்துபுல் அக்தாபு பர்துல் அஹ்பாபு செய்யதினா ஷாஹுல் ஹமீது காதிர் ஒலி கஞ்சஸவாய் கஞ்சபக்ஷ் ஆண்டவரவர்கள் ஒரு பெரிய அருள் வாய்ந்த மகாத்மா. அம்மஹானது வரலாறு இங்ஙண் குறிப்பிடத் தக்கதே.

ஐக்கிய மாகாணத்தில் மாணிக்கபுரி என்பது ஒரு நகரம். இங்கு சுமார் 400 ஆண்டுகளுக்குமுன் (ஹிஜிரா 910) ஹஜரத் சையதுஷாஹுல் ஹமீது காதிர் ஒலி என்ற மஹான் வெள்ளிக்கிழமை கூடிய நன்னாளில் அவதரித்தார். அவரது அன்னையின் பெயர் பீபி பாத்திமா அவர்கள். தந்தையின் பெயர் ஹஜரத் சையது ஹசன் குத்தூஸ் சாஹிப் அவர்கள். கடவுள் பக்தி, மதி நுட்பம், கருணை முதலிய நற்பண்புகள் இவரது குழந்தைப் பருவத்திலேயே இவரிடம் குடிகொண்டன. எட்டாண்டிற்குள் அரபு மொழியில் தேர்ச்சி பெற்று, குவாலியர் சென்று ஹஜரத் சையது முஹமது கௌஸ் சாஹிப் அவர்களிடம் தெய்வீக அறிவைப்பெற்று மேன்மையுற்றார். சில ஆண்டுகள் கழிந்த பின்னர் 404 சீடர்களுடன் மாணிக்கபுரி, ஆப்கானிஸ்தானம் முதலான இடங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து வருகையில், இறந்தவரை உயிர்பெறச் செய்தல், குருடர்களுக்குப் பார்வையளித்தல், ஊமையைப் பேச வைத்தல், தீரா நோயையும் தீர்த்து வைத்தல் முதலிய அற்புதச் செயல்களைச் செய்தார்கள். மஹான் மணம் செய்து கொள்ளாமல் பிரும்மசரிய விரதத்தை அனுஷ்டித்தும் அவருக்கு சையத் முகமது யூசுப் சாஹிபு என்ற பெயருடைய குமாரர் இருந்தார் என்றால் அது விந்தையாகவே தோன்றும். அதன் வரலாற்றையும் சற்று கவனிப்போம்.

மஹான் லாகூரில் தனது சிஷ்யர்களுடன் தங்கிய காலத்து கண்ணியமிகுந்த காஸி ஹஜரத் நூர்தீன் சாஹிப் என்பவர் தனக்கு மகப் பேறு அருளுமாறு கேட்டுக்கொண்டார். மகாத்மாவும் தாம்பூலமென்று அதன் ரஸத்தை நூர்தீன் சாஹிப் மனைவி ஜோஹரா அம்மாளுக்குக் கொடுக்கச் செய்தார்கள். அதன் பயனாக ஆண்டவன் அருளால் பீபி ஜோஹரா அம்மாளுக்கு ஆண் மகவு பிறந்தது. இக்குழந்தையே மகானின் புதல்வர் என்று வழங்கப்படும் சையது முகமது யூசுப் சாஹிபு ஆகும். சிறிது நாட்கள் சென்றபின் மஹான் தனது சீடர்களுடனும் மகனுடனும் பொன்னனி, சிலோன் முதலான இடங்களில் இஸ்லாத்தைப்போதித்துக் கொண்டு சுற்றுப்பிரயாணம் வருகையில் தஞ்சையை அடைந்தார். தஞ்சை அரசன் அச்சுதப்ப நாயகரது தீரா நோயையும் தீர்த்து வைத்து அரசிக்கும் மக்கள் செல்வத்தை அருள் செய்தார். இதற்கு கைமாறாக அச்சுதப்ப நாயகன் நீண்ட செல்வத்தையும், இப்பொழுது நாகூர் தர்கா எழில்மிக்கு விளங்கும் புனிதமான பூமியையும் கொடையாக அளித்தனன். இத்தலத்தில் மஹான் தனது வாழ்நாள் முழுவதும்கழித்து தனது அறுபத்தெட்டாம் பிராயத்தில் வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார். அன்னாரது

ஆக்ஞை பிரகாரம் அவரது பூதவுடல் தர்ஹாவில் அடக்கம் செய்யப் பட்டுள்ளது. இம்மஹானையே மக்கள் யாவரும் தற்பொழுது ஆண்டவன் என்று அழைக்கிறார்கள். தர்காவில் இம்மஹானது கல்லறையும், மகனார், மகனாரின் மனைவி, அவர்களது ஆறு குமாரர்கள், இரண்டு மகளிர் முதலிய வர்களது கல்லறைகளும் விளங்குகின்றன. இங்கு ஒரு மண்டலம் பிணி யாளர்கள் தங்கினால் எத்தகைய பிணியும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். மஹானின் மறைவுக்குப் பிறகும் அவரது புகழுடல் எங்கும் ஒளி வீசுகின்றது. அவரது அற்புதச் செயல்கள் யாவரையும் கவருகின்றன. தஞ்சை மகாராஷ்டிர அரசர் துளசி மகாராஜாவின் தந்தை தர்கா முன் புறம் விளங்கும் பெரிய மனோராவைக் கட்டி மகிழ்ந்தான்.

அண்ணல் காந்திஜியை அறியாதார் யாவரும் இலர். அவர் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகவே தனது அரிய உயிரையும் தியாகம் செய்தார். அந்த விழுமியநோக்கத்தின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக நமது நாகூரில் ஒற்றுமை நிலவுகிறது. குடும்பத்திலுள்ள ஆஸ்தியை இரு சகோதரர்கள் ஒற்றுமையாகப் பகிர்ந்து கொள்வதைப்போல பப்ளிக் ரோடுக்கு (**Main Road**) கிழக்கே முஸ்லிம்களும் மேற்கே ஹிந்துக்களும் எங்கள் ஊரைப் பகிர்ந்துகொண்டு ஒற்றுமையாகவே வசிக்கிறார்கள்.

பிரதி வியாழக்கிழமை தோறும் எல்லா மதத்தினரும் திரள் திரளாக சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய மூன்று உரிமை களுடன் பரஸ்பர உள்ளத்துடன் தர்காவில் அடங்கியுள்ள மஹானுக்கு வணக்கம் தெரிவிக்கின்றார்கள்; காணிக்கை செலுத்துகிறார்கள்; நல்வழிப் படுகிறார்கள். இது உலகின்கண் ஓர் புதுமை அன்றோ! இம்மஹானின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் கொண்டாடப்படும் திருவிழா கந்தூரி மகோத்ஸவம் எனப்படும் இத்திருவிழாவின்போது அரேபியா, ஸிலோன், பர்மா முதலான எல்லா நாடுகளிலிருந்தும் பல லக்ஷக்கணக்கான யாத்ரீகர்கள் இங்கு கூடுகிறார்கள்.

தர்காவில் நுழைந்துவிட்டால் நாமே நம்மை மறந்து விடுவோம். சாம்பிராணி தூபம் ஒரு பக்கம்; பாத்திஹா ஓதுதல் ஒரு மருங்கு; வேதம் ஓதுதல் ஒரு புடை; இவைகளுக்கு நடுவில் பக்தர்கள் மண்டியிட்டு ஆண்டவனுக்கு வணக்கம் தெரிவித்தலில் ஒரு பக்திப் பரவசம்; சாஹிபு மார்கள் பாத பெட்டியை பக்தர்களது சிரசில் வைப்பதில் ஒரு சிரத்தை; மயில் தோகையால் முகங்களைத் தடவுதலில் ஒரு விசேஷம். தூண்களை யும் வாசற்படியையும் பக்தர்கள் கைகளால் தடவி முத்தமிட்டுக்கொள்வ தில் ஓர் ஆனந்தம் ஆஹா! என்ன பிரமாதம்! தேவலோகமும் இதற்கு ஈடாகுமோ என்று ஐயுறுமாறு பூலோக தேவலோகமாக சிறப்புற்று விளங் குவது எங்கள்ஊர் தர்கா. தினந்தோறும் முஸ்லிம்கள் தர்கா ஒலிபெருக்கி மூலம் ஐந்து முறை வாங்கு சொல்வதின் நாதம் விண்ணைப் பிளக்கும். அத்தகைய பக்தியும் வைராக்கியமும் எல்லா மக்களுக்கும் ஏற்பட்டால் "இனி நமக்கெம பயமேது?" என்று பெருமிதங்கொண்டு எமலோகத்தை வீழ்ச்சியுறச் செய்யலாம்; யுத்தங்களை புற முதுகு காட்டச் செய்யலாம்.

எங்கள் ஊரில் ஒரு சிவாலயமும் வைணவ ஆலயமும் உண்டு. சிவாலயத்திலுள்ள திருநாகவல்லி ஸமேத ஸ்ரீ நாகநாதஸ்வாமியை தரிசித்தால் பாபம் தொலையும். வைணவ ஆலயத்திலுள்ள அலர்மேலு மங்கா ஸமேத ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமானை சேவித்தால் வைகுந்தம் கிட்டும். வருணதேவனின் கருணை எங்கள் ஊரில் பரிபூர்ணம். கிழக்கில் முழங்கும் கடல்; மேற்கில் வெட்டாறு வட்டமிட்டுக்கொண்டு ஒய்யாரமாகக் கடலில் கலக்கும் காட்சி காணத்தக்கதே. வருண தேவனுக்கு மகிழ்ச்சி பொங்கினால் நாமும் தெப்போத்ஸவத்தில் மகிழ்வோம். கிழக்கிலிருந்து ஒரு வீச்சல்; மேற்கிலிருந்து ஒரு துள்ளல்; அவ்வளவு தான் மக்கள் அனைவரும் தர்காவில் சரணாகதி அடைவதுதான் தாமதம். வருணனது மகிழ்ச்சி சற்று தணியும். மனிதன் இன்பம், துன்பம் இரண்டையும் கலந்து அனுபவித்தால் தான் உண்மைப் பொருள் விளங்கும். இந்த உண்மையை வருணன் மக்களுக்கு உபதேசிக்கக்கருதி இன்பத்தில் துன்பத்தைத் தருகிறான் போலும்.

***எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்***
***கண்ணென்ப வாழும் உயிர்க்கு***

என்பது பொய்யா மொழி. கண்களைக் கொடுத்து உயிர்களை மக்களாக்குவது நமது நாகூரிலுள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியும், அதன் கிளைப்பள்ளியும். கற்பக விருக்ஷம் தன்னை அடைந்தோர்க்கு விரும்பினவற்றையெல்லாம் உதவுவது போல, நமது பள்ளியும் எல்லா மதத்தினருக்கும் ஆண், பெண் இருபாலருக்கும் தளராது நின்று பணியாற்றுகிறது.

***கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்***
***வேட்ப மொழிவதாம் சொல்***

நண்பரும் பகைவரும் விரும்பும்படி சொல்வதே சிறந்த சொல்லாகும் என்ற கருத்துக்கிணங்க மாணவ, மாணவிகள் சொல்வன்மை பெற்றுப் பயின்று வருகிறார்கள்.

*ஒரு பக்கம் கோபுரமும், ஒரு பக்கம் மனோராவும் இடையில் தென்னை மரமும் கூடிய சின்னமே இப்பள்ளியைக் குறிக்கிறது பள்ளியின் சீரிய குறிக்கோள்* **அன்பே கடவுள்** (Love is God) *என்பது.*

*இவ்வாறு பல நலமும்பெற்ற நமது வளமிகுந்த பதியில்*

***பசியும் பிணியும் பகையும் நீங்கி***
***வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி***

*பல்லாண்டு பல்லாண்டு வாழ்வோமாக!*

***வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்***
***வாழிய பாரத மணித் திருநாடு!!***

# விதியா? சதியா?

[**பி. ஆர். மூர்த்தி,** ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு ]

அந்த வீதியின் கோடியில்தான் இருந்தது சிறைச் சாலை! குறுகியும் இருளடைந்தும் காணப்பட்ட அச்சிறைச் சாலையின் இரும்புக்கதவு இழுத்துப் பூட்டப்பட்டிருந்தது! அச் சிறைச்சாலையின் வாயிலில் நின்ருல் கந்தனின் கதறல் காதில் விழும். சிறையின் வாயிலருகே நின்று கந்தன் கூறும் அவனது வாழ்க்கையின் இறந்தகால நிகழ்ச்சிகளைக் கேளுங்கள்...

மூன்று வருடங்களுக்குமுன் ஒருநாள் பிரசித்திப்பெற்ற ஏழைகளின் இருப்பிடமான—பாலத்தடி ஒரு புது ஆசாமியை ஏற்றுக்கொண்டது! ஆம்! நான் தான் ஏழைகளில் ஒருவனுக அங்கு வந்து சேர்ந்தேன். நான் ஏழைதானேயொழிய பிச்சை யெடுப்பதை நான் விரும்பவில்லை. என் வயிற்றுக்காக வேலை தேடிப் புறப்பட்டேன்.

இவ்வுலகம் எல்லோரும் உழைக்கவேண்டும்; ஒவ்வொரு வனும் உழைக்கப் பிறந்தான் என்று கூறுகிறது ஆனல் உழைக்க வேண்டும்; உழைத்து உயரவேண்டும் என்ற எண்ண முள்ள என்னை பயன்படுத்திக்கொள்ள யாரும் முன்வரவில்லை. நான் வேலை தேடி அலைந்தது தான் மிச்சம்; வேலை கிடைக்க வில்லை.

அன்று நான் பட்டினி! அதற்கடுத்த நாளும் பட்டினி தான்! மூன்றும் நாளும் பட்டினி! தினமும் இந்நிலை நீடித்தது. பசிக்கொடுமையால் நான் பாலத்தடியைவிட்டு வேறு இடம் சென்றேன். என் துரதிர்ஷ்டம் என்னுடே வந்தது! என் மன மும் அலுத்து விட்டது! தினம் காலையில் எழுந்திருப்பதும், வேலை தேடிச் செல்வதும், தோல்வியுடன் திரும்பி அன்று பட்டினி கிடப்பதும் என் தினசரிப் பாடமாயின.

அன்று நான் வேலை தேடி வெளியே செல்லவில்லை! ஊம்! தினமும் வேலை தேடிச்சென்று எதைக்கண்டேன்? பட்டினி யும் பசியும் தானே என்னைப்போன்ற ஏழைகளின் சொத்து! என் போன்றவர்கட்கு உயிர் இருக்கிறது; ஆனல் உயிர் வாழ உணவில்லை. வேலைசெய்ய வேண்டுமென்ற ஆவல் இருக்கிறது; கொடுப்பாரில்லை.

இப்படியே இருந்தால் அவ்வேழை உயிர் வாழ்வதேது? நானும் இப்படிப்பட்ட நிலையில் தான் இருந்தேன்! நாள் ஆக ஆக எனக்கு உயிரின்மீது வெறுப்பு ஏற்பட்டது. நாம் எதற்காக வாழ்கிறோம்? நாம் உலகில் வாழ்ந்து சாதிப்பது என்ன? என்ற எண்ணம் ஏற்படவே நான் அன்று காலை எழுந்திருந்தேன். "என்னை ஏன் படைத்தாய் ஆண்டவா?" என்று கேட்டுக் கொண்டே நடந்தேன்; எங்கே போவதென்றே தெரியவில்லை. எங்கோ பிறந்தேன்; எங்கோ வளர்ந்தேன்; எங்கோ செல்கிறேன்......எங்கோ...எங்கோ...

ஆதவன் மேற்றிசையில் போய் மறைந்து கொண்டான்; இரவுப்பெண் விரட்டியதால்! உடனே இரவுப்பெண் தனது ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்து விட்டாள்! சற்றுமுன் கலகலப்பாக இருந்த தெருக்கள் சந்தடியின்றி அடங்கிவிட்டன! ஊரையே காரிருள் கவ்விக்கொண்டிருந்தது!

என்னால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. பசியும், அசதியும் என்னை மயக்கப்படுத்தி கீழே தள்ளிவிட்டன. நான் இருக்குமிடம் எனக்கே தெரியவில்லை; உறங்கினேன்.

என்னை யாரோ தொட்டு எழுப்பினார்கள்; கண் திறந்தேன்! ஆதவனின் கூரம்புகள் என் கண்களைக் குத்திக் கூசச் செய்தன! என் எதிரே நாலைந்து போலீஸ்காரர்களும் ஏனையோரும் கூட்டமாக நின்றனர். அவர்களுக்குப் பின்னால்....ஐயோ! இதென்னது ஒரு பெரிய மனிதரின் உடலில் கத்தி பாய்ச்சப்பட்டு அம்மனிதன் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தான்! மறுகணம் இன்ஸ்பெக்டர் நான் சுகுணபுரம் மிராசுதாரைக் கொலைசெய்து விட்டதாக என்னைக் கைது செய்தார்.

அநீதி தானே இப்பொழுது நீதி என்ற பெயர் பூண்டிருக்கிறது! நியாயமற்ற முறையில் கோர்ட்டில் எனக்கு ஆயுள் தண்டனை விதித்தனர். இரண்டு தினங்களுக்கு முன் நான் இச்சிறைக்கு வந்தேன்.

தவறுதலாகக் கோவலனைக் கொலை செய்துவிட்ட பாண்டியன் நீதி தவறியதை அறிந்ததும் இறந்தானே; தன் மணாளன் மனுநீதி தவறிவிட்டதை அறிந்ததும் இறந்தாளே கோப்பெருந்தேவி! அவர்கள் காலத்தேயிருந்த நீதியே கூறு நானா குற்றவாளி? நான் செய்தது குற்றமா? கூறு குற்றம் எது? உழைத்து மானமாக வாழ நினைத்தது குற்றமா? அங்கு இருட்டிலே மயக்கமாகி விழுந்தது குற்றமா? எனக்கு இனி விமோசனமே கிடையாதா?

*ஐயோ!... நான் மயக்கமாகி விழுந்த இடத்திலேயே இறந்திருக்கக்கூடாதா? அப்பொழுது இறந்தால் சுதந்திரமாக இறக்கலாமே! இப்பொழுதானல் குற்றவாளி என்ற முறையில் அல்லவா இறக்க வேண்டும்! என் ஆயுள் பூருவும் இச்சிறையிலே கிடக்க வேண்டியது தானு? நாளெல்லாம் அழுதுபுலம்பி மக்கி மடிய வேண்டியது தானு? அதைவிட இறப்பதேமேல்...*

*அதற்கு மேல் கந்தன் பேசமாட்டான். அன்றைய தினசரிகளில், "சுகுணபுரம் மிராசுதார் கொலை வழக்கில் குற்றவாளிகள் அகப்பட்டு விட்டார்கள். அவர்களுக்குத் தூக்குத் தண்டனையும், கந்தனுக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப் பட்டது என்று போட்டிருந்தது.*

* * * *

*அன்றைய தினமே காலையில் ஐந்து மணிக்கு மீன் பிடிக்கச் சென்றவர்களின் படகிலே ஒரு மனிதனின் இறந்த சடலம் அகப்பட்டது. அதைக் கரையிலே கொண்டு போட்டார்கள். அவன் கந்தனே தான்!*

*மனிதர்கள் நீதி தவறி நடக்கும் இவ்வுலகில் தனக்கு இடமில்லை என்று நினைத்த அவ்வேழை நிலத்தைப்போல் மூன்று மடங்கு பெரியது எனப்படும் அலைகடலில் ஆழ்ந்து விட்டான்!*

*ஆனல் பாழும் சமூகமோ, "அவன் திருடன்! கொலைகாரன்! தற்கொலை புரிந்து கொண்டவன்" என்றெல்லாம் கூறுகிறது. ஆனல் அலைகடல் அரசியோ "அவன் நிரபராதி; அவன் தற்கொலை புரிந்துகொள்ளவில்லை; என்னிடம் தஞ்சம் புகுந்து விட்டான்" என்று கூறுகிருள்.*

*இக்கதையைக் கேட்டால் நீங்கள் இறந்து போன கந்தனின் ஆன்மா சாந்தியடைய ஒரு சொட்டுக்கண்ணீர் விடுங்கள். ஆனல் அவன் வாழ முடியாமல் போனது விதியினலா? சதியினலா? என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை.*

# ★ மாணவர் கடமை. ★

[பெரி. சித. பெரியகருப்பன், ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு.]

அறிவும் திறனும் ஆற்றலும் வளரும்
உயர்நிலைப் பள்ளியின் உத்தமத் தோழ!
தெளிவுறு சிந்தையொடு தேனெனும் மொழிகளை
தெரிந்திடு வோமெனக் கும்மி பாடிடுவீர்!

காலையிற் சேவலும் கூவிடு முன்னரே
கடிதின் எழுந்தே கருமம் முடித்தே
நூலினைப் பயின்றே நுட்பமாய்த் தெரிந்தே
கற்றதைச் சிந்தையிற் கவனமாய்க் கொள்வீர்.

பயின்றதன் பின்னரே பண்புடன் நீவிரே
கற்றதை உள்ளத்தினில் கொண்டோமா எனவே
கருதியே பார்திடு வீர் பின்னர்
மற்று மோர் முறை கற்றிடுவீரே.

பள்ளி முடிந்ததும் பாதையில் விளையாடாது
பாங்குடன் இல்லமே சென்றிடு வீர்
தந்தைதாய் சொல்லினை தலைமேற் கொண்டுமே
தன்கடன் செய்யவே தாவிச் சென்றிடுவீர்.

தந்தையின் நிலையை அறிந்திட வேண்டும்
வீணான செலவுகள் விலக்கிட வேண்டும்
வீறுடன் நீருமே விளங்கிடவே நன்கு
உடலைப் போற்றிக் காத்திடு வீர்.

பிச்சையேற் றேனும் விச்சை கற்று
நீவிர் பாரிற் சிறந்தோனாய் வாழ்ந்திடுவீர்
பங்கயம் போலவே முகமலர்ந்தே நீவிர்
பள்ளியிற் சென்றே பாடம் படிப்பீர்,

நந்தமிழ் மாணவர் நல்லறிஞ ராகவே
நாட்டினில் புகழ் ஏங்கிடவே நீவிர்
பள்ளியின் புகழை நாட்டினில் நாட்டிட
பாங்குடன் பயின்றே பண்புடன் வாழ்ந்திடுவீர்.

# நான் கண்ட ஜப்பானியர்

[**E. அப்துல் ரஜ்ஜாக்,** நான்காம் படிவம் 'அ' பிரிவு.]

இரண்டாம் உலகப் பெரும் போரிலே வெற்றிமகள் ஜப்பானியரின் சார்பில் இருந்திருந்தால் உலகத்தின் தலைவிதியே வேறுவிதமாக மாறியிருக்கும். நாமனைவரும் ஜப்பானியரின் கொடுங்கோலாட்சிக்கு அடிமைப்பட்டிருப்போம். ஆனால் ''வல்லவருக்கு வல்லவர் வையகத்திலுண்டு' என்பதை அமெரிக்க அணுக்குண்டு ஹிரோஷிமா நகரில் நிரூபித்துக் காட்டியது. ஜப்பானியப்படையெடுப்பால் அதிக நஷ்டமடைந்த நாடுகளுள் பர்மாவும் ஒன்று. நான் பர்மாவில் இருந்த சமயம் அங்கிருந்த ஜப்பானியர்களுடன் பழக நேரிட்டது. அப்பழக்கத்தால் பெற்ற அனுபவங்களை நான் இக்கட்டுரையில் சுருக்கி வரைய விழைகின்றேன்.

பொதுவாக, ஜப்பானியர்கள் மற்ற ஆசிய நாட்டாரை விட குள்ளமானவர்கள்; சுறுசுறுப்பு நிறைந்தவர்கள்; மேனாட்டு நாகரிகத்தில் மோகம் கொண்டவர்கள்; அவர்கள் சீனர்களைப் போல் மஞ்சள் நிறத்தவராகவும், அவர்களைவிட நாகரிகமடைந்தவர்களாகவும் திகழ்கிறார்கள். நான் கண்ட ஜப்பானியருள் பெரும்பாலோர் இராணுவ உத்தியோகஸ்தர்களே. எனினும் அவர்களில் சிலர் இதர தொழில் செய்பவராகவும் இருந்தனர். ஜப்பானியர் அணியும் உடைகள் மேலைநாட்டுப் பாணியில் அமைந்தவை. ஜப்பானியப் பெண்கள் விதவிதமான வர்ண ஆடைகளை அணிவதில் வேட்கை மிக்கவர்கள். பட்டாடை அணிவதில் அவர்களுக்குத் தனிப்பிரியம் உண்டு. காலில் நீண்டகுதியுடைய மர மிதியடிகளை அணிவார்கள். பால் கலக்காத தேனீர் அவர்களுக்கு மிகவும் பிரியம். அதற்கு ஜப்பானிய மொழியில் சானோயு (Cha-noyu) என்று பெயர். மீன் உணவு ஜப்பானியர்களுக்குப் பிடித்தமானவற்றிலொன்றாகும்.

ஜப்பானியரின் நாட்டுப்பற்று அன்னியரை அவதிக்குள்ளாக்கியது. ஏனெனில் அவர்கள் ஆட்சி காலத்தில் எதிரிகளை நடத்திய முறை மிகவும் கொடூரமானது. குற்றவாளிகளை ஈவிரக்கமின்றித் தண்டிப்பதில் ஜப்பானியர்களுக்கு நிகர் ஜப்பானியர்களே! அவர்கள் குற்றவாளியின் நகங்களைப்

நகங்களைப் பிடுங்கி அவர்களை கொதிக்கும் நீரில் நனைத்து எடுப்பார்கள். குற்றவாளிகளை மோட்டார் எஞ்சினுக்குள் புகுத்தி மோட்டாரை ஓட்டுவார்கள். இவை ஜப்பானியரின் சில நூதனத் தண்டனை முறைகளாகும். ஜப்பானியரின் ஆட்சியில் பர்மாவில் உள்ள சீனப் பாடசாலைகள் மூடப்பட்டன. ஜப்பானியர்களிடம் இன்னும் சில புதிரான குணங்களைக் காணலாம். ஒருவன் ஜப்பானியனைப் பார்த்து 'ஜப்பானியன்' என்றால் அவன் கன்னம் வீங்காமல் தப்ப முடியாது. அவர்களை 'நீபூன்' (Neapoon) என்று தான் கூப்பிட வேண்டும்.

''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்ற ஆன்றோர் வாக்கு ஜப்பானியர் விஷயத்தில் நிரூபிக்கப்பட்டது. அதாவது பர்மாவிலிருந்து சயாம் செல்லும் நீண்ட சாலைக்குச் ''சயாம் ரோடு'' (Siam Road) என்று பெயர். சயாம் ரோடு யுத்த காலத்தில் ஜப்பானிய, ஆங்கிலேய குண்டு வீச்சுகளால் படுசேதமடைந்தது. ஜப்பானியர்கள் அந்தச் சாலையை ஆங்கிலேயக் கைதிகளைக் கொண்டு செப்பனிட்டார்கள். சாலை செப்பனிடப்பட்டு முடியுமுன் ஜப்பானியர்கள் போரில் தோல்வியடைந்தார்கள். மீதி பாகத்தை ஆங்கிலேயர்கள் கைதியாகப் பிடிக்கப்பட்ட ஜப்பானியர்களைக்கொண்டு முடித்தார்கள்.

ஓர் சுவையான நிகழ்ச்சியை நினைவுகூற விரும்புகிறேன். அதாவது ஜப்பானிய வீரனொருவன் என் அண்டை வீட்டிற்கு வந்தான். அவன் மிகவும் களைத்துப் போயிருந்தான். தாகம் அதிகமிருந்தது போலும்! தென்னை மரத்தைக்காட்டி இளநீர் தரும்படி கேட்டான். அவர்களுக்கோ இளநீர் கொடுக்க விருப்பமில்லை. ''மரம் ஏற ஆள் இல்லை'' என்று சொல்லிவிட்டார்கள். அவன் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. கோபத்துடன் திரும்பி விட்டான். சிறிது நேரங்கழித்து கோடாரி, அரிவாள் சகிதம் இரண்டு ஜப்பானியர்களை அழைத்து வந்தான். அவர்களைக்கண்டதும் அண்டைவீட்டுக்காரர்கள் பயந்து வீட்டுக்குள் ஒளிந்துக்கொண்டார்கள். ஏனென்றால் ஒருபாவமும் அறியாத சீனக் குழந்தைகளின் தலைகளைவெட்டி கம்பத்தில் நட்டி வைத்தவர்களல்லவா அவர்கள்? ஆனால் நடந்தது வேறு. கூட வந்த இரண்டு பேர் தென்னை மரத்தை வேரோடு சாய்த்தார்கள். வேண்டிய அளவு இளநீரைப் பருகினார்கள். பிறகு 'அறிகதோ' (Arigatho) வந்தனம் என்று கூறிவிட்டுத் திரும்பினார்கள்.

நாங்கள் பள்ளிக்கூடத்தில் பாடம் கற்றுக்கொண்டிருப்போம், சிறிது நேரத்தில் அபாயச்சங்கு அலறும். ஆங்கிலேயக் குண்டுவீச்சு விமானங்களின் வருகையின் முன்னறிவிப்பு இது.

[32-ம் பக்கம் பார்க்க]

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# நாடகத்தமிழ்

★★★[வித்வான், மு. சிவசுப்பிரமணியன், தமிழாசிரியர்]★★★

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன்தோன்றி மூத்த குடியாக தமிழ் நாட்டிலே வதிந்துவரும் மக்கள் அமிழ்தினும் இனிதாம் அருந்தமிழைத் தன் தாய்மொழியாகக் கொண்டிலங்கி வரல் யாவரும் அறிந்ததே. இத்தகைய தமிழ் மக்கள் யாண்டு தோன்றினர் எனவும், அவர்தம் மொழியாம் அருந்தமிழ் அரும்பிய காலம் யாதெனவும் அறுதியிட்டுக் கூறினாரில்லை. இம்மாந்தர் தம் வாழ்க்கை முதன்முதலில் மலையிடைத்தோன்றி பின்னர் விரிந்து சென்றதென அறிஞர்கள் கருதுகின்றனர். இப்பழம் பெரும் பெருமை வாய்ந்த தமிழானது முப்பகுப்பினைக் கொண்டது. அவையாவன இயல், இசை, நாடகம் என்பனவாம்.

***முத்தமிழென்றற்குச் சான்றுகள்:—***

தமிழகத்தே மூன்று எனும் எண் மிகச் சிறப்புடைத்து. சான்றாக, முத்தமிழ், முந்நாடு, மூவரசு, முப்பொருள் எனக் கூறலை நோக்குக. இவற்றுள் முத்தமிழ் என்பதும் ஒன்றெனக் கூறப்பட்டதன்றோ; அதனை அன்னோர் சொற்கொண்டு காட்டுதும். "பிங்கலர்" தமது நூலின்கண் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழென வகைபடச் சாற்றினர் மதியுணர்ந்தோரே" எனக் கூறிச்சென்றமையானும், ஏழாம் (7) நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரெனத்தகும் சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவரான வாகீசப் பெருந்தகையார் (திருநாவுக்கரசர்)

***"மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்<br>முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்"***

எனக் கூறிப்போந்தமையானும். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" எனப் பகர்ந்துள்ளமையாலும் தமிழ் மூவகைப்படும் எனல் விளங்கும். இம் முத்தமிழின் கூட்டமைப்பே நம் தலைப்பாம்.

***நாடகம் என்பதன் பொருள்:—***

நாடகம் என்பது ஓர் நிகழ்ச்சியை முதலாகக் கொண்டு அதில் வரும் கதாபாத்திரங்கட்கேற்ப வேடங்கள் புனைந்து, உரையாடல்களாலும், செயல்களாலும் அந்நிகழ்ச்சியை விளக்கிக் காட்டலேயாம்.

*நாடகம் பற்றிய முற்கால நூல்கள்:—*

நாடகம் என்பது நுண்கலைகள் சிலவற்றுள் ஒன்றாகும். ஆயின் நாடகம் பற்றிக்கூறும் பண்டைத் தமிழ் நூல்கள் அதிகம் கிடைத்தில. நாடகத்தமிழ் பற்றிக்கூறும் பழந்தமிழ் நூல்களில் ஒன்று மதிவாணர் நாடகத்தமிழ் நூல் என்பதாம். இ∴தும் முற்றும் நாடகத்தமிழ் பற்றிய விளக்கம் கூறிற்றில என்பது அறிஞர்களின் கொள்கை. பின்னர் நாடகம் பற்றிய விளக்கம் கரண்டல் யாங்ஙனமெனின்? கூறுவாம். குடிமக்கள் காப்பியமெனத்தகும் தமிழன்னையின் சிலம்பாம் "சிலப்பதிகாரமே" முத்தமிழ் நூல் எனல் சாலும். இம்முத்தமிழ்க் காப்பியமாகிய சிலம்பில் மூன்றாம் காதையாகிய "அரங்கேற்று காதை"யைக்கானில், அ∴து முழுவதும் இசைத்தமிழும், நாடகத்தமிழும் விரிந்து நிற்றலைக் காணலாம். இ∴து அரங்கின் அமைப்பு, பின்னணி இயக்குவார் அமரும் முறைகள், நடிக்கும் பெண்டிர்க்குரிய பல்வகைப்படும் இலக்கணங்கள் முதலியவற்றை விரிவாகக்கூறும். மேலும் இந்நாடகம் முற்காலத்தே கூத்தெனும் பெயர் பெற்றிருந்ததெனலையும் விளக்கும். இக்கூத்து தானும் சாந்திக்கூத்து, அவிநயக்கூத்து, விநோதக் கூத்தென பல்வகைப்படும்.

*அரங்கின் அமைப்பு:—*

சிற்ப நூலார் காட்டும் முறைப்படி குற்றமற்றதோர் இடத்தைத் தேர்ந்து, அரங்கம் அளக்கும் கோல் இருபத்து நான்கு விரலாக எழுகோல் அகலமும் எண்கோல் நீளமும், ஒரு கோல் உயரமும் கொண்டதாகவும், அரங்கின் மேற்பாகத்திற்கும் கீழ்ப்பகுதிக்கும் நான்கு கோல் அளவு இடைப்பகுதி கொண்டதாகவும், பல்வகை திரைச்சீலை முதலியன கொண்டதாகவும் நடிக்கும் அரங்கம் அமைதல் வேண்டுமென்பர். இனி நடிக்கும் மகளிர் மேடையில் ஏறும் முறையும், அவர் நடித்ததற்குரிய முறையையும், இளங்கோவடிகள் எடுத்துக்காட்டியுள்ளமை சிலம்பால் அறியக்கிடப்பன, அவாவுடையார் கண்டு மகிழ்க.

*கூத்து மரபினர்:—*

இனி இத்தகையதான கூத்து நிகழ்தற்குரிய தகுதிபெற்றாரை தனியொரு மரபினராகப் பண்டை மக்கள் கருதி வந்தனர். கூத்து வகையில் விநோதக் கூத்தை "கொடித்தேர் வேந்தரும், குறுநில மன்னரும் பகை வென்று இருந்தஇடத்தே விநோதங்காணுங் கூத்தென" அடியார்க்கு நல்லார் விளக்கிப் போந்தமையால் கூத்து முதலிய நிகழ்ச்சிகளை அரசன்

ஆதரித்து வந்தமை விளங்கும். மேலும் முற்காலத்தே விறலியர், பாணர் என்ற மரபினர் வாழ்ந்து வந்தமையிம், அவர்கள் அரசனிடத்தே ஆடிப் பாடிச் சென்று பரிசில் பெற்றுச் செல்லும் செயலேயும் சங்க நூற்கள் எடுத்துக் காட்டா நிற்கும். எனவே இக்கூத்து நிகழ்வதற்கென , ஓர் இன மும், அதற்கு அரசனின் ஆதரவும் இருந்தமை பெறப்படும்.

***இடம்:—***

கூத்து நிகழ்வதற்குரிய இடமாக முதன் முதலில் அரசனின் அரண்மனேயும்; திருக்கோயில்களுமே பயன்பட்டன. திருக்கோயில்கள் அரங்கமானதற்குரிய காரணம் என்னேயோ எனின்? சைவ; வைணவ மதப் பூசல்களும் பிறவும் தோன்றிய ஞான்று இறைவனின் ஆலயங்கள் கூத்தாடுதற்குரிய இடங்களாக இடம் பெற்றன · எனல் கல் வெட்டால் அறியக்கிடப்பனவாகும்

***நாடகத்தின் வளர்ச்சி:—***

நாட்டியங்கள் முதலில் தோன்றிய ஞான்று சில அநாகரிகமாகவும் தோன்றியிருத்தற்கூடும். அவை காலஞ் செல்லச்செல்ல சிறிது சிறிதாக சீர்பெற்று தற்காலத்தே நிகழும் சிறப்புடன் விளங்கியிருத்தல் வேண்டும். கி. பி. 6-ம் நூற்றுண்டளவில் தோன்றிய பல்வகைச் சமயங்களின் போராட்டமே நாடகத்தின் வளர்ச்சிக்குக் காரணம் எனல் பொருந்தும். முன்னர் கூறியாங்கு ஆலயங்களிலும்; அரசன் அவையிலும் நடிக்கப்பட்ட தாகக் கூறப்படும் கூத்துக்களே சில பல அம்சங்களோடு கூடி தற்காலத் தில் நடிக்கப்படும் நாடகமாக வளர்ச்சியுற்றதெனல்சாலும்.

***முற்காலத்து நாடகத்தமிழ் உள்ளமைக்கோர் சான்று:—***

முதலாம் இராஜராஜன் கி. பி. (985—1017) தன் கோநகராகக் கொண்டிலங்கிய தஞ்சையில்; பிரகதீசுவரர் கோவில் கட்டிய வரலாற்றை யும்; அவனது அருஞ்செயல்களேயும் எடுத்துக் காட்டுவனவாக "இராஜ ராஜேசுவர" நாடகம் நடிக்கப்பட்டு வந்தமை கல் வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றன. மேலும் கி. பி. 1119ல் வாழ்ந்த "கமலாலய பட்டர்" என்பவர் "பூம்புலியூர் நாடகம்" என்ற ஒன்றை இயற்றி அரசனிடம் "இறையிலி நிலம்" பெற்றூர் என மற்ருேர் கல்வெட்டு கூருநிற்கும். இவ் வாற்ருல் முற்காலத்தே நாடகங்கள் நிகழ்ந்தமையும், அதனே அரசன் ஆதரித்து வந்தமையும் "அங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

***நாடகத்தின் சிறப்பியல்புகள்:—***

தமிழை இயல்: இசை; நாடகமென முப்பகுப்பாகக் கொண்டனர் என்பதை முற்கூறினேம். அவற்றின் முறை வைப்பும் காரணம் கருதிய தேயாம். முதலில் தோன்றியது இயற்றமிழ் இயலினும் பின்னர் தோன்றி யது இசைத்தமிழ், இவ்விரண்டும் ஒன்ருேடொன்று விராவி நின்று இசை

# "இறைஞ்சுகிறோம்!"

*எம். கே. மீரான், ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு.*

அஞ்சித்தன் பண்பிழக்கும் அடிமை தனைநீக்கி!
வஞ்சித்தார் கொடுமைகளை நறுக்கிட்டாய்! எங்களுடை
நெஞ்சத்தே என்றென்றும் அவியாத தழல்மூட்டி
துஞ்சிட்டாய்! இதுமுறையா? தக்கோனே! எம்காந்தியே!

சுருங்கிய காலத்திற்குள் சரித்திரம் காணுவிதமாய்
பெருங்குழுவைக் கொண்ட ஒருபேரரசை தந்திட்டாய்!
தனியொருவர் இன்னணம் துவக்கிவிட்ட மாச்செயலை
பினுமொருவர் பூர்த்திசெய்யும் வரலாறே கேட்டுள்ளேன்,

பொங்கிற்று இப்பூமி உன்விரிவால்! எனினும்நீ,
இங்குற்ற மாந்தர்களின் இதயத்தில் ஒளி.:கின்றாய்!
நின்ஆவி அமைதியுற நிமலவனை இறைஞ்சுகிறோம்!
எந்நாளும் உன்கீர்த்தி இமயம்போல் நின்றிலகும்!

யின்பம் பயக்கும். இவை கேள்வியின்பம் மட்டுமே பயக்கும் தன்மையுடைத்து. அ.:தும் அத்துறையில் பயிற்சிமிக்கார்க்கேயாம். ஆனால் இவ்விரண்டின் வழிவந்த நாடகத் தமிழோ எனின்? கற்றார்க்கும், கல்லார்க்கும் கேள்வியின்பத்தோடு அவர்களின் புலன் ஒன்றிய காட்சியின்பத்தையும் பயக்கும் சிறப்பியல்புடைத்து.

*முடிவுரை:—*

இதுகாறும் கூறியவாற்றால் தமிழ் நாட்டின் தொன்மையும், தமிழ் மொழியின் சிறப்பும்; அதன் பிரிவு இயல்; இசை; நாடகமென மூவகைத்தெனவும் காட்டி, அவற்றுள் முன்னர் கூத்தென வழங்கப்பட்டனவே, பின்னர் திருத்தம்பெற்று நாடகம் எனப்பெயர் பெற்றதெனவும் கூறி. இந் நாடகத்தமிழ் முன்னிரண்டினையும் விடச் சிறந்ததெனவும் கூறினும்; நாடகத் தமிழ் என்பது ஓர் அளவிட முடியாத பெரும்பொருள். அப்பொருளுள் ஒரு சில ஈண்டு ஒருவாறு விளங்கப்பட்டது. இச் சிறப்பு வாய்ந்த நாடகத் தமிழ் நானிலத்தே மிக்குப்பெருகி சிறப்புறுவதாக.

***வாழ்க தமிழ்! வளர்க நாடகக்கலை!!***

உடனே பயங்கர இடிமுழக்கத்துடன் குண்டுகள் விழும் ஓசை. பள்ளி மாணவர்கள் நிலைகுலைந்து கட்டுப்பாடின்றி தங்கள் தங்கள் வீட்டுக்கு ஓடிவிடுவார்கள். அக்கூட்டத்தில் நானும் ஒருவன். சிலரின் உயிர் வீடு திரும்புமுன் பிரிந்து விடும்.

சேற்றிலும் தாமரை உண்டல்லவா? அது போல (**Kitkawa**) கிட்கவா என்ற ஜப்பானியன் மிகவும் நல்லவன். அவன் பலவிதத்தில் எங்கள் ஊருக்கு உழைத்துள்ளான். அவன் தன் பெயரால் ஓர் நூல் நிலையத்தை ஏற்படுத்தினன்.

ஜப்பானியர்கள் சிறந்த போர்வீரர்களாகவும், சுறு சுறுப்பு நிறைந்தவர்களாகவும் திகழ்வதற்குக் காரணம் அவர் களுக்கு மாணவப் பருவத்தில் அளிக்கப்படும் தேகப்பயிற்சி முறைகளே. ஜப்பானியப்பள்ளிகளில் பள்ளி பாடங்களைவிட உடல் ஆரோக்கியத்தையே அதிகமாக கவனிக்கிறுர்கள். தேகப் பயிற்சி வகுப்புக்கு வராத மாணவனை பள்ளியை விட்டு நீக்கி விடுவார்கள். ஜப்பானியப் பள்ளிகளில் கட்டுப்பாடுகள் அதிகம். பள்ளி மாணவர்கள் யூனிபாரம் அணிய வேண்டும். தலையில் தொப்பி வைக்கக்கூடாது. உடைகள் சுத்தமாக இருக்கவேண்டும்.

யுத்தத்தில் அடியோடு அழிக்கப்பட்ட ஜப்பான் தற் பொழுது வேகமாக முன்னேறி வருகிறது. மற்ற நாடுகள் வியக்கத்தக்க முறையில் செய்பொருள்களைச் செய்து குவித்து குறைந்த விலையில் விற்று அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுடன் வியாபாரப் போட்டியிடுகிறது. வியாபாரத் துறைகளில் மற்ற நாடுகளுக்கு வழிகாட்டுகிறது. "நாம் ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளைப்பார்த்து முன்னேற முயல வேண்டும். அந்நாடுகள் சென்ற யுத்தங்களில் அடி யோடு அழிக்கப்பட்டிருப்பினும் சளையா ஊக்கத்துடன் முன் னேறி வருகிறது" — **பண்டிட் ஜவஹர்லால் நேரு.**




At India's Lands end — Cape comerin.

*Photo by:* **S. A. Levai**

CONNE... PUBLIC
21 NOV 1956
MADRAS



**School Cabinet 55-56.**



Excursion 5—5—55.
At Tirukuttalam Falls.
*Photo by*:- **S. A. Levai.**



**Craft section - Basketmaking.**

# தமிழ்த் தென்றல்!

[இரா. முருகேசன், ஆறும் படிவம் 'அ' பிரிவு]

இம்மலர்தலை உலகில் எத்தனையோ மக்கள் தோன்றுகிறார்கள், வாழ்கிறார்கள், இறக்கிறார்கள். எல்லோரது வாழ்வும் வளமும் அந்தக் காலத்து மக்களால் போற்றப்படுவதில்லை. அவர்களைப் போற்றிப் புகழ் காவியம் தீட்டப்படுவதில்லை. ஆனால் ஒரு சிலரின் நாமம் ஒவ்வொருவரின் நாவிலேயும் நர்த்தனமாடிக்கொண்டே இருக்கும். ஆம்.... அத்தகையோரில் ஒருவர் தான் திரு. வி. க.

தித்திப்பை அள்ளி வழங்கும் அந்த "திரு. வி. க." என்ற நான்கு எழுத்துக்கள் 'திருவாரூர் விருத்தாசல முதலியாரின் திருமகன் கலியாணசுந்தரனார்' என்ற தொடரைச் சுமந்து நமக்குச் சொல்லாமல் சொல்லுகின்றன,

திரு. வி. க. துள்ளத்தில் தோன்றிய தமிழ்த் தென்றல்! தமிழர் நீடுதுயில் போக்கப் பாடிவந்த நிலா!! தரணி பெற பரணி பாடிய தமிழ்க்குயில்!!!

26—8—1853ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் துள்ளத்திலே எளியவரின் குடிசையிலே, ஏழையின் வயிற்றிலே தோன்றினார் கலியாணசுந்தரம். அவரது வாழ்வில் வசந்தம் வீசவில்லை! வளம் கொழிக்கவில்லை!! மாறாக வறுமைப்புயல் தன் கோர உருவொடு வீசி அவரை அலக்கழித்தது கொட்டும் தேளும், சீறும் நாகமும் குடியிருந்த சிறுகுடிசையில் தோன்றிய திரு. வி. க. தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யும் வானம் பாடியாவார் என்று யாரால் அன்று கூறமுடியும்?

பள்ளிப் படிப்பை ஆறும் படிவத்துடன் (S. S. L. C.) நிறுத்திக்கொண்டார் திரு. வி. க. எனவே "புக்கீப்பிங்" அறிவு பெற்ற அவர் ஸ்பென்ஸர் கம்பெனியில் அலுவல் பார்த்தார். பின்னர் தான் பயின்ற வெஸ்லி கல்லூரியில் ஆசிரியப் பணி புரிந்தார். அப்பொழுது தான் இந்திய மக்களின் மனத்திலே

சுதந்திர உணர்ச்சி கொழுந்து விட்டெறிந்தது. கரை புரண்ட உணர்ச்சிப் பெருக்கால் பொது வாழ்க்கையில் ஈடுபடத் தன் ஆசிரியப் பணியைத் துறந்தார்.

விடுதலை ஒளியை நம் நாட்டவர் இல்லந்தோறும் நல்லவர் உள்ளந்தோறும் ஏற்றும் பணியில் ஈடுபட்டவர்கள் இராஜாஜி, பெரியார் ஈ. வெ. ரா, வரதராஜலு நாயுடு, சத்திய மூர்த்தி, சீனுவாசய்யங்கார், திரு. வி. க. ஆகியோர் தான். "தேசபக்தன்" ஆசிரியப் பொறுப்பேற்ற திரு. வி. க. தமிழுக்கு ஓர் தனிநடை தந்து தமிழ் உணர்ச்சியைப் பரப்பினர். தமிழில் பேசினல் வெட்கம், எழுதினல் அவமானம் என்று கொண்ட தமிழர்கட்கு அழகு தமிழில் பேச, எழுத ஆர்வத்தை வளர்த் தார்.

பின்னர் 'நவசக்தி' அசிரியராகத் திகழ்ந்தார். அரசியல் கருத்துக்களை, பெண்ணின் பெருமையை, இலக்கிய ரசத்தை தன் நவசக்தியின் மூலம் வடித்துக்காட்டினர். அப்போது தான் நாடு அவரை 'நடமாடும் செந்தமிழ்க் கல்லூரி'என்று போற்றிப் புகழ்ந்தது. 'சிந்து பாடும் சிற்றருவி' என சிறப்புப் பெயர் தந்தது.

வெள்ளைக்கார ஆட்சி தன் கொள்ளைக்கார சூழ்ச்சித் திறத்தால் விடுதலை விரும்பிகளை அடக்கிவந்தது. அப்பொழுது தான் திரு. வி. க.வின் வெண்கலக் குரல் சென்னை கடற்கரை யில் அடிக்கடி ஒலிக்கும். 'பஞ்சாப் படுகொலையின் அக்கிரமச் செயலையும், டையரின் வெறிபிடித்த ஆணவச் செயலையும்' வேதனை விளையாடும் வேகக் குரலில் விளக்கிச் சொல்லுவார்.

"உன்னைத்தான், விடுதலையே! உள்ளத்தின் ஒளியே!! ஓடிவா இத்திரு நாட்டில்" என்று விடுதலை வேண்டி நின்றார். நாடு மீள—கேடு தீர பாடுபட்டார்.

சென்னைத் தொழிலாளர்கள் திசை காணது தவித்து நின்ற நேரத்தில் திரு. வி. க. அவர்கட்கோர் கலங்கரை விளக் காஞர்! தொழிலாளர் தலைவர்கள் என்று கூறிக்கொண்டு தாம் ஆடும் அரசியல் சதுரங்கத்துக்கு தொழிலாளர்களைக் காயாக்

கும் இந்நாளில் திரு. வி. க. உண்மைத் தலைவரானார். அரசியலாரின் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கொடுஞ் சிறையும் அவரது கொள்கையை மாற்றவில்லை.

கன்னல் சுவை தரும் தமிழில் கருத்தோட்டங்களைக் காட்டும் எழுத்தின் மன்னர் அவர். காவிரியாற்றின் புனல் போன்ற அவரது எழுத்து, ஓட்டத்தில் கற்பனைக் குமிழியூட்டும் உணர்ச்சிப் பிழம்புகள். அவரது மொழி தமிழர்க்குத்தேன்!! கனி! தித்திக்கும் கற்கண்டு!

அவரது பேனா வடித்தெடுத்தக் கருத்துக் கருவூலங்கள்:- 'என் கடன் பணிசெய்து கிடப்பதே', 'முருகன் அல்லது அழகு' 'சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து' பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம்' — தமிழன்னைக்கு அவர் சூட்டிய மகுடங்கள். 'இளமையும் ஒருமையும்' 'அருகன் அருகே' 'விடுதலை வழி' 'பொருளும் அருளும்' 'மார்க்ஸீயமும் காந்தீயமும்' 'முதுமை உளரல்' போன்ற செய்யுள் நூல்கள் தமிழ்த் தாயின் முத்தாரத்தில் கோத்த அருமுத்துக்கள்.

இவ்விதம் வறுமையிலே பிறந்து, வறுமையிலே வாழ்ந்து வந்த திரு. வி. க. வறுமையிலேயே இறந்தார். அவர் மறைந்த கதை மறக்க முடியாத ஓர் சோகக் காவியம். துயரம் தரும் ஓர் துன்ப நாடகம்!

17—9—1953ல் தென்பால் எழுந்த அந்த தீந்தமிழ்ச் சுடர் அணைந்தது. தமிழகமே சோக இருளில் சிக்கித்தவித்தது. அவர் ஓர் நடமாடும் தமிழ்க் கலைக்கூடம்! அவர் மறைந்தாலும் அந்தத் தமிழோவியம் நம் மனத்திரையை விட்டு அகலாது. "நடமாடியத் தமிழ்நாடு" மறைந்தது என்றாலும் "தமிழ்த் தென்றல் திரு. வி. க."வை தமிழரின் நா மறக்காது. வாழ்க திரு. வி. க.வின் நாமம்! வளர்க அவரது நினைவுச் சின்னமாம் மணி மண்டபம்!!

# சில மணிகள்.

*வித்வான், பொ. தில்லைக்கோவிந்தன்,*
*தலைமைத் தமிழாசிரியர்.*

சில மணிகள் என்ற தொடரைப் பார்த்ததும், அறுபது நிமிடம் கொண்ட காலத்தின் அளவைக் காட்டும் பெயரோ? அதைப் பற்றிய விளக்கமோ என்று எண்ணலாம் இல்லை. முத்து, பவளம், மாணிக்கம் போன்ற ஒருசில மணிகளைப் பற்றிய விளக்கம் என்று கருதலாம். இல்லை! இல்லை!! நவதானியம் என்று சொல்லப்படுகின்ற தானிய மணிகளைப் பற்றிய விளக்கம் என்று கருதலாம். ஆனால் அந்த மணிகளின் விளக்கங்களைப்பற்றியெல்லாம் இங்குக் குறிப்பிடவில்லை; கட்டுரையைப் படித்துப் பார்த்து, ஒரு சில மணிகளைக் காணும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மக்களாகப் பிறந்தவர் என்றுவது ஒருநாள் இறப்பர். பிறப்பு என்ற சொல்லைக் கேட்டவுடன் அதன் மறுதலைச் சொல்லான இறப்பு என்பது நம் நினைவிற்கு வருகிறது. பிறப்பு, இறப்பு ஆகிய இவ்விரண்டிற்கும் இடையில் வாழ்க்கை என்ற ஒரு நிலை இருக்கிறது. இந்த வாழ்க்கையில் செய்ய வேண்டுவது என்ன என்பதை உண்மையுணர்ந்த உயர்ந்தோர் உரைத்துப் போந்தார்; அவ்வுண்மையை உணர வேண்டுமென்ற எண்ணமில்லாதார், உணரும் ஆற்றலில்லாதார், வீணாக வாழ்க்கையின் பயன் பொருளைத் தேடுதலும், அதை மிகுதியாகச் செய்து, தன்னை மற்றவர் பார்த்து பணக்காரர், வசதியுடையவர், என்ற பாராட்டுதலைப் பெறுதலுமே, வாழ்க்கையின் பயன் என்றெண்ணுகின்றனர். ஈட்டியவர், இறந்தால், அவரது பொருள் அவர் மகனோ, மற்ற உறவினரோ அடைவர், அல்லது அவர் இருக்கும்போதே கடன்காரர் கொண்டு செல்லினும் செல்லுவர். ஆதலால் வாழ்க்கையின் பயன் பொருளீட்டலில்லை என்பதை அறியலாம். பின்னர் எது என்றால் அறமே. அறம் என்பது பிறர்க்குக் கொடுத்தாலன்றோ? அச்செயற்குப் பொருள் வேண்டாவோ? பொருள் ஈட்டல் வாழ்க்கையின் பயன் இல்லை என்று கூறலாமோ? என்றால் அற்றன்று. மனதினிடத்து பொறாமை, ஆசை, கோபம் முதலிய மாசுகளின்றி வாழ்வதே சிறந்த அறம். ஆம்! இந்த நன்னெறியுடைய மனம் சிவநெறியெனும் அன்பு நெறியும், அருள் நெறியுமுடைய மனமாகி, மருளாகிய இருள் நீங்கப்பெற்று, ஞான ஒளிபெற்ற அறம் தவழும் மனமாகும். அந்த மனத்துடன் வாழ்வாரே அறநெறியில் வாழ்வோராவார். இப்படிப்பட்ட அரும்பெரும் கருத்தாகிய மணியை இதோ பாருங்கள்.

*மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற.*

*அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்ற தறம்.*

பார்த்தீர்களா? மணியை! மணியின் திறம் எத்தகையது! மணியை விலை மதிக்க முடிகிறதா உங்களுக்கு, மதிப்பிட முடியாத மாணிக்க மணியாக அல்லவா விளங்குகிறது. சில மணியில் ஒரு மணியைக் கண்டீர்கள் மற்றொரு மணியை மேலும் காணுங்கள்.

***தமிழன்பர்களே!***

தந்தை தனயனைப் பார்த்து உண்மை பேசு, மெய் பேசு, வாய்மை பேசு என்பர் இவைகளை பார்த்ததைப் பார்த்தபடியே, கேட்டதைக் கேட்டபடியே, சொன்னதைச் சொன்னபடியே பேசுதல் என்ற பொருளில் யாவரும் வழங்குகின்றோம் உண்மையில் இந்தப் பொருள்தானா இவைகளுக்கு என்று சிந்திக்குமிடத்து இன்றென்பது விளங்கும். உள்ளத்தின் தன்மை உண்மையாம், மெய்யின் தன்மை மெய்மையாம், வாயின் தன்மை வாய்மையாம். ஒருவனுடைய உள்ளம், உடல், வாய் முதலியன நல்லன நாடல் வேண்டுமென்பதே கருத்தாம். இதையே ''திரிகாண சுத்தி''யென்பர்.

மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் ஒன்றுபட்டு நல்ல செயல் செய்தல் வேண்டும்; அவ்விதம் செய்யும் செயலினையே ஆன்றோர் விரும்புவர். மனம் எண்ணும் கருத்தைச் சொல்லால் வெளியிடுவது வாய் என்ற உறுப்பே. வாய் என்ற உறுப்பிலிருந்து வரும் சொல் எவ்வுயிர்க்கும் துன்பத்தைத் தரலாகாது. இன்பத்தையே தருதலாயிருக்க வேண்டும். துன்பந் தருவதாயின் அச்சொல் வாய்மை என்ற பெயரைப் பெறாது.

வாய்மை என்ற சொல்லின் பொருளை ஒரு விளக்கத்தின் மூலம் காணலாம். ஒருவன் கையில் வாளெடுத்துக்கொண்டு மற்றொருவனைக் கொல்ல ஓடி வருகிறான். மற்றவன் ''ஐயா! என்னை ஒருவன் கொல்ல வருகிறான், காப்பாற்றுங்கள்'' என்று சொல்லி வீட்டினுள் புகுந்து மறைந்து கொள்கிறான். வாளெடுத்து வந்தவன் ''இங்கு ஒருவன் வந்தானா'' என்று கேட்கிறான். அப்பொழுது வீட்டிலுள்ளவர் என்ன கூற வேண்டும் ''ஒருவரும் வரவில்லையே'' என்று தானே கூறவேண்டும். அப்படிச் சொன்னால் தானே உள்ளிருப்பவன் உயிர் தப்பும். உள்ளதை உள்ளபடியே சொல்லுதல் தான் உண்மை, வாய்மையெனில் உள்ளிருப்பவன் உயிர்க்கு அழிவு வருமல்லவா? ஆதலால் தான் உள்ளதை உள்ளபடியே சொல்லுதல் வாய்மையல்ல என்று ஆன்றோர் அறிவித்த கருத்து மணி. அம்மணி வாசகத்தைக் கீழே படித்தறியுங்கள்.

*வாய்மை யெனப்படுவதியா தெனின் யாதொன்றும்*
*தீமை யிலாத சொலல்.*

*பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்த்த*
*நன்மை பயக்கு மெனின்.*

பாடலின் கருத்து எவ்விதம்? தற்காலத்தில் நாம் கொள்ளும் உண்மையின் பொருளுக்கும், பொய்யாமொழியார் புகன்ற பொருளுக்கும் எத்துணை வேற்றுமை இருக்கிறது பார்த்தீர்களா? மற்றொரு மணியை மேலும் படித்துப் பாருங்கள்.

அரிதினும் அரிதாகிய மானிடப் பிறவியை எடுத்தவர்கள் செயற்கு அரிய செயல்கள் செய்ய வேண்டுமென்பர் ஆன்றோர். அச் செயல்கள் பலவற்றுள்ளும் தவம் என்பது ஒன்று. காடுகளில் இருந்து சருகு, கிழங்கு முதலியன தின்று. நீண்ட நாட்கள் உடம்பையொருக்கி இறைவனை எண்ணிக்கொண்டிருத்தலே தவம் செய்தலெனப் பலரும் கூறுவர் இதற்குச் சான்றாக விசுவாமித்திர முனிவர் தவம் செய்தார் என்று கூறுகிற வரலாறு போன்றவற்றைக் காணலாம். ஆனால் வாழ்க்கையில் தனக்கு ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருப்பதாகிய அச்செயலே தவமாகக் கூறப்படுகிறது. உடம்பை உணவின்றி வருத்துதல் தவமென்று கூறவில்லை. ஏனென்றால் உயிர் நிலைக்களமாகிய உடம்பு, உணவு முதலியன இன்றி வருந்துமாயின் உடம்பின் காரணமாக, உயிர் அடையும் நலன்கள் ஒன்றும் அடையாமற் போகும். அப்பொழுது உடம்பெடுத்ததன் பயனே இல்லாமல் போகுமல்லவா? இக்கருத்தை வலியுறுத்தவே தான், பத்தாந் திருமுறையாகிய திருமந்திரம் என்ற நூலில் திருமூலர் என்ற பெரியார் கூறும் அறிவுரையைக் காணுங்கள்.

*உடம்பார் அழியில் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தேன்*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.*

உடம்பெடுத்ததன் பயன் உயிர் உண்மையுணர்ந்து உள்ளொளியுடன் இருப்பதற்கே அவ்வாறிருக்க உடம்பை உணவு முதலியன இன்றி வருத்தினால் அந்த உள்ளொளியாம் பயனைப் பெற முடியுமா? என்பதைச் சிந்திக்க வேண்டும். புத்தர் வரலாறு கூட இக்கருத்தை வலியுறுத்தும். உணவு முதலியன இன்றி தியானத்தில் ஆழ்ந்திருந்த புத்தர் உண்மை நிலையுணராலின்றி, உணவு முதலியன உண்டு, மக்கள் துக்க நிவர்த்திக்கு காரணமென்ன என ஆய்ந்து முடிவு கண்டார் என்று அவரது வரலாறு

கூறுகிறது. இவரது நிலைகண்டு வெறுத்துச்சென்ற சீடர்கள்கூட உண்மை யுணர்ந்து பிறகு சீடர்களாக வந்து சேர்ந்ததாகவும் கூறப்படுகிறது. ஆகவே உணவின்றி உடலை வருத்துவது தவமில்லை, ஓரளவு உணவு உண்டு வாழ்க்கையில் ஏற்படும் துன்பமனைத்தும் பொறுத்து பிறவுயிர் களுக்கும் துன்பம் செய்யாது இன்பமானவற்றைச் செய்வதே தவமென உணர்கின்றோம். இக்கருத்துகளனைத்தும் அமைத்து இரத்தினச் சுருக்க மாகக் கூறும் பொருளுரையைக் கூர்ந்து நோக்குங்கள்.

***உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.***

பாடலின் கருத்து மேற்சொன்ன பொருள்களனைத்தும் தன்னுள் அடக்கி ஒளிவிடும் மணியாக விளங்குகின்றதே? மணியின் தரம் எத்தகைத்து மதிப்பிட்டுக் கூறுங்கள்.

மற்றொரு மாணிக்க மணியைப் பாருங்கள். உலக வாழ்க்கையில் மக்கள் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ வேண்டியவர்களாக இருக்கின் றனர். சேர்ந்து வாழும் வாழ்க்கையில் நல்லன மிகுதியாக இருந்தால் தான் வாழ்வு இன்பமளிக்கும்; இன்றேல் வாழ்வு துன்ப மயமாகத்தான் இருக்கும். அப்படியானால் வாழ்வை விடுவதா? என்றால் இல்லை. அதற்கு ஒரு வழி இருக்கிறது. ஒருவர் ஒருவருடன் பழகுங்கால் குணம், குற்றம் எவ்வளவு இருக்கிறது என்பதைக் கணித்தறிய வேண்டும். குணம் மிகுதி யாகவும் குற்றம் குறைவாகவும் உள்ளவரிடத்து கூட்டுறவும், குற்றம் மிகுதியாகவும் குணம் குறைவாகவும் உள்ளவரிடத்து கூடாமையும் கொள்ளல் வேண்டும். ஏனென்றால் மக்கள் யாவரும் குணமேயுடைய வராய் இருக்கமாட்டார்கள், ஒருசில குற்றமும் இருத்தல் கூடும். மற்றும் குற்றமேயுடையவராயும் ஒருவரும் இருக்கமாட்டார் ஒருசில குணமும் இருத்தல் கூடும். அதனால்தான் நல்லன மிகுந்துள்ளவரை ஏற்று அல்லன உள்ளவரை ஒதுக்காது அகல்க என்ற கருத்துக்களை எல்லாம் அடக்கிக் காட்டுகிறது

***குணநாடி குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்***

என்ற இம்மாணிக்க மணி; இவை போன்ற பல மணிகள் உண்டு. ஒருசில மணிகளைச் "சில மணிகள்" என்ற தலைப்பில் தந்தேன். மணியின் தரம் கண்டு மனதில் மதித்து மாண்பெய்துவீர்களாக.

# ★ சிந்திப்போம்! ★

[இரா. கல்யாணசுந்தரம்]

**தை** மாதம் முதல்நாள் **பொங்கல் பண்டிகை.** மக்கள் சாவகாசமாகவும், மகிழ்ச்சியுடனும் இப்பண்டிகையைக் கொண்டாடுகிருர்கள். மக்களின் உள்ளத்தில் ஒருபுத்துணர்ச்சி தை பிறந்து வழி பிறந்து விட்டது என்ற எண்ணம். இதே போல் ஒவ்வொரு பண்டிகைகளும் நம் தென்னிந்தியாவில் மகிழ்ச்சியோடு கொண்டாடப்படுகின்றன. ஏன் இப்பண்டிகை களைக் கொண்டாடுகிறோம்? இறைவனுக்கு வணக்கம் செலுத்து வதற்காக. மகிழ்ச்சிக்குரியதுதான்! மேலும், நம் பெரியோர்கள் தலைமுறை தலைமுறையாகச் செய்துவந்த பழக்கம். பெரியோர் சொற்படி நடக்க வேண்டுமென்ற எண்ணம். பெரியோர்களை கவுரவிக்க வேண்டியது தான்!

பெரியோர்கள் இதுமட்டும் தானு நமக்குக் கட்டளை யிட்டார்கள்? இன்னும் எவ்வளவோ மாபெரும் பொறுப்புகளை நம்மீது சுமத்தியிருக்கிருர்கள். அவை என்ன?

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினு யிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர்விளங்கி யொளிர நிறுத்தல், "அன்னயாவினும் புண்ணியங் கோடி ஆங்கோரேழைக்கு எழுத்தறிவித்தல்" என்று பாரதியார் கூறவில்லையா" ஆம்! கூறியிருக்கிருர். கவிஞரின் கருத்து சிறந்தது தான். அன்னுர் இட்ட கட்டளையைக் காரியத்தில் காட்டினுேமா? கவிஞர் எண்ணத்தைப் பூர்த்திசெய்யவில்லையா? கவிஞர் காணி நிலம் கேட்டார். நாம் காணி நிலத்தோடல்லாமல் ஒரு மணி மண்டபம் கட்டியுள்ளோம் எட்டயபுரத்தில்—தமிழர் அன்பால். ஆம்! "கவுரவிக்க வேண்டியது தான் கவிஞரை. இது மட்டும் தானு அவர் விரும்பினுர். "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வீர்" என்று கூறவில்லையா! ஆம்! கூறியிருக் கிருர். தமிழறிந்த நாம் தமிழறியாத மக்களுக்கு தமிழ் போதித் தோமா? தமிழ் போதிக்கவேண்டும், அவர்களும் கற்று ஏற்றத் தாழ்வின்றி சுகமாக வாழ எப்பொழுதாவது சிந்தித்தோமா?

நாம் படித்தவர்களென்று பெருமை கொள்கிறோம். பெருமை வேண்டியதே. குருடர் நடுவே இருக்க நமக்குப் பிடிக்குமா? பிடிக்காது. அதுபோலவே ஒருசிலர் கல்வி கற்று, அறிவாளி நாங்கள் என்று பெருமை பேசுவதில் பலன் என்ன? பயன் என்ன?

பெரியோர்களைப் பற்றிப் புகழ்கிறோம், உணர்ச்சி மேலிட மேடை மீதேறி பேசுகிறோம், ஆண்டுவிழா கொண்டாடுகிறோம். இதுமட்டும் தானா நாம் பெரியோர்களுக்குச் செய்ய வேண்டியது. இதுமட்டும் தானா அவர்கள் செய்யச் சொன்னார்கள். அவர்கள் கூறியதில் ஏதாவதொன்றைக் காரியத்தில் காட்டினோமா? எதற்கும் இல்லையென்ற பதில் தானே!

காந்தி நாட்டிற்காக உழைத்தார். நமக்கு அரசியல் விடுதலை வாங்கித்தந்தார். அவர் படத்தை வீட்டில் மாட்டி, மாலை சூட்டி மகிழ்கிறோம். ஆனால் காந்தி 'மாணவருக்காக' ஒரு புத்தகம், ஒரு திட்டம் வெளியிட்டிருக்கிறாரே, அதைப் படித்ததுண்டோ? அதன்படி நடந்ததுண்டோ? காந்தி எழுதிய புத்தகங்களைப் பன்முறை படித்திருக்கின்றோம். படித்தால் மட்டும் போதுமா? அவர் தந்த திட்டத்தைக் காரியத்தில் செய்ய சிந்திக்க வேண்டும்.

இதுபோன்ற பல, கற்ற இளைஞர்களால் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதுவும் சுதந்திர இந்தியாவிலே, மக்கள் தம் பண்பாட்டிற்கு, நாட்டின் மேன்மைக்கு, செய்யப்பட வேண்டியது மிக அவசியம் வீணைகப்பேசி காலத்தைக் கழிப்பதில் பயனில்லை. போதும் அடிமை மோகம். சுதந்திரர்கள் நாம் ஆகவே பொறுப்பு அதிகம். காலம் தாழ்த்துவது கடமையைக் கழிப்பதாகும்.

இறைவனை இறைஞ்சுவதுடன் நாம் மனதில் ஒன்று சங்கற்பம் செய்து கொள்வோம். "அடுத்த ஆண்டுக்குள் குறைந்தது ஐவருக்காவது நாம் கற்றதை-நம் தாய் மொழியை மற்றவர்களுக்கு கல்வி வாசனையற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்போம். அவ்வாறு செய்ய வேண்டியது "நம் கடமை" என்று சங்கற்பம் செய்து கொள்வோம். இதைப்பற்றி சிந்திப்போம். கடமையென உணர்ந்து இதைச் செய்வோம்.

**வாழ்க தமிழ் !**

# எங்கள் இன்பச்செலவு.

[A. முகம்மது அப்துல் காதர், ஆறும் படிவம்]

உண்மையான அறிவைப் பெறுவதற்குரிய சாதனங்கள் பல. அவற்றுள் உல்லாசப் பிரயாணம் அல்லது இன்பச்செலவு என்பதும் ஒன்று. எங்கள் பள்ளியில் இவ்வருஷம் சுமார் 40 மாணவர்களும், 9 ஆசிரியர்களும் பங்கெடுத்துக்கொண்ட உல்லாசப் பிரயாணத்தைப் பற்றி இங்கண் கூறுவோம். திருவனந்தபுரம், கன்னியாகுமரி, திருக்குற்ருலம், மதுரை முதலாய எழில் மிக்க தலங்களுக்குச் செல்ல வேண்டுமென்று சங்கல்பித்துக்கொண்டு விக்னேஸ்வர பூஜை செய்து முடித்து சென்ற 12—8—55 இரவு 8-32 மணி வண்டித்தொடரில் எங்களின் பயணத்தை தொடங்கினேம்.

அன்று இரவு சரியாக 8-32க்கு எங்கள் வண்டித்தொடர் 'குப், குப்' என்று புகையைக் கக்கிக்கொண்டு டயர் இல்லாத வண்டி மேடு பள்ளங்கள் நிறைந்த ரஸ்தாவில் போவது போல் சொகுசாக திருவாரூர் வரை பிரயாணம் செய்தது. பிறகு சற்று வேகமாகச் சென்று தஞ்சையை அடைந்தது. தஞ்சையிலும், திருச்சியிலும் வேறு ரயிலில் மாறினேம். மறுநாள் காலையில் 7-30 மணிக்கு மதுரை ஜங்ஷன் எங்களுக்கு காலே ஆகாரத்தை வைத்துக்கொண்டு எதிர்பார்த்து நின்றது. நாங்களும் அதற்கு நன்றி கூறினேம். திருப்புப் பயணத்தில அங்கு தங்குவதாகக் கூறி மேலும் பிரயாணத்தை மேற்கொண்டோம். மஹா பாரதத்தில் ராஜஸூய யாகத்தில் ஸ்ரீ கண்ணன் வகித்த பதவியைப்போல் எங்கள் தலைமை ஆசிரியர் போகும் இடங்களிலெல்லாம் சாப்பாட்டுக்கு முன்கூட்டியே தந்தி மூலமாக ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. நடுப்பகலில் செங்கோட்டையில் சாம்பார், தயிர்சாத பொட்டலங்களும், வடைகளும் எங்களுக்கு விருந்தளித்தன. தென்காசி தாண்டியதும் ஆரம்பித்தது கேரளப் பகுதியின் எழில் மிக்கக் காட்சி. ஆகாய விமானத்தில் இருந்து கொண்டு கீழே நோக்குவதைப் போன்றிருந்தது வண்டித்தொடரிலிருந்து கீழே நோக்குவது. மலைத்தொடரின்மேல் வண்டித்தொடர் வளைந்து வளைந்து ஏறுவது "I think I can; I think I can" என்று பாடுவதைப் போலவும், மலைத்தொடரிலிருந்து கீழே இறங்கும் போது "I thought I could I thought I could" என்று பாடுவதைப் போலவும் இருந்தது. ஆரியங்காட்டுக் கணவாயைக் கடக்கும் காட்சி வெகு அற்புதம். இராமாயணத்தில் ஆஞ்சனேய ஸ்வாமிகள் பெரிய இராக்ஷஸர்கள் வாயில்புகுந்து காதுகள் மூலம் வெளிவந்தார் என்று கேட்டுள்ளோம். அதைப்போலவே

எங்களது வண்டித்தொடர் முன்னால் குறுக்கிட்ட பெரிய மலைகளை ஊடுருவிச் சென்றது. மாலை மூன்று மணி திடீரென்று இரவாய் மாறிற்று; ஒரே இருட்டு; வெளியே தலைநீட்ட முடியாத புகைமண்டலம். வண்டித் தொடரில் மின்சார விளக்குகள்; சற்று நேரம் சென்ற பின்னர் இருட்டு திடீரென்று பகலாய் மாறியது. வண்டித்தொடர் மலையை கடந்துவிட்டது என்று உணர்ந்தோம். இருபுறமும் மலைகள்; மலைகளில், காடுகளில் தேக்கு, அகில், சந்தனம் முதலிய மரங்களின் ஒருவகை மணம்; மலை களிலிருந்து நீர் அருவிகள் பள்ளத்தாக்குகளை நோக்கி ஓடின. ஆஹா! என்ன உழைப்பு. கடினமான அந்த பள்ளத்தாக்குகளிலும், கேரள நாட்டு மக்கள் கடுமையான உழைப்பினால் பயிர் செய்கிறார்கள். எங்கும் வாழையும், தென்னையும், மூங்கிலும் காட்சியளித்தன. மாலை சுமார் மணி 5-க்கு மேற்குக் கடற்கரையைக் கண்டு மகிழ்ந்தோம். கடலோரத்தில் தென்னை மரங்கள் காட்சியளித்தன. ஒருபுறம் கடலும் மற்றோர்புறம் வானளாவிய மலைகளும் அரவணைத்திருக்கும் கேரள நாட்டின் இயற்கை அன்னையின் திருக்கோலங்கள் இணையில்லாதவை. மாலை சுமார் மணி 6-க்கு திருவனந்தபுரம் சேர்ந்தோம். எங்களுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த விடுதியில் இரவுப் பொழுதைக் கழித்தோம்.

மறுதினம் ஒரு புனித நாள். அதிகாலையில் பஜனை கோஷ்டி யாரின் கர்ணாமிர்தமான கானம் எங்களைக் கவர்ந்தது. 6 மணிக்குள் யாவரும் ஸ்நானம் செய்து முடித்துக்கொண்டு ஸ்ரீ பத்மநாபஸ்வாமி ஆலயத்திற்குச் சென்றோம். ராஜ தரிசனம் கிட்டிற்று. பிறகு மூன்று வாசற்படி வழியாக, பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீ பத்மநாபஸ்வாமியை தரிசனம் செய்தோம். ஆலயத்தில் மின்சார விளக்குகள் கிடையா. ஒரு தனி பயபக்தி உணர்ச்சி ஆலயத்தில் நிலவுகிறது. ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி, ஸ்ரீ கண்ணபிரான் முதலிய மூர்த்திகளையும் சேவித்தோம். 7-30 மணிக்கு காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு மிருகக்காட்சி சாலை, மீன் காட்சி சாலை, தண்ணீர் சுத்தி செய்து அனுப்பும் நிலயம் முதலியவற்றை பார்வையிட்டோம். பகல் போஜனத்திற்குப்பிறகு 2-30 மணிக்கு எங்களது நித்தம் தவம் செய்யும் குமரி எல்லையின் பிரயாணம் ஆரம்பமாயிற்று.

மூன்று வாடகைக்கார்கள் மூலம் பிரயாணம் செய்யும் போது ஒரு கார் விபத்துக்குள்ளாகியது. திடீரென்று ஒரு சப்தம் "க்ரீச்" மோட்டார் எங்களைத் தூக்கிப்போட்டது. நாங்கள் எமலோகம் சென்றே திரும்பினோம் என்று சொல்லலாம். மோட்டார் காரிலுள்ள சக்கரம் காணாமற் போயிற்று. என்னே விந்தை! ஒரு பர்லாங் தூரத்திற்கப்பால் ரஸ்தாவின் பக்கவாட்டு வாய்க்காலில் சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆண்டவன் அருளால் யாவரும் உயிர் பிழைத்தோம் 5 மணிக்கு குமரி எல்லையில் கடல் அலை வீசுவது எங்களை வரவேற்பதுபோல் தோன்றியது. மறுசமயம் 'வராதே போ' என்று சொல்வதைப்போன்றிருந்தது கதிரவன் மேற்குக் கடலில் மறைந்த காட்சியும், பொன்னிறமான தண்ணீரும்,

ஆகாயமும் எங்களது நெஞ்சை அள்ளின. இயற்கையன்னை நடனமிடு வதைப் போலும், அந்நடனத்தோடு எங்களது உள்ளமும் துள்ளிக்குதித்த தைப்போன்றுமிருந்தது. மூன்று நீரும் சேரும் இடத்தில் நீராடினோம். காமிராக்கள் எங்கும் கண் இமைத்தன. பிறகு கன்னி பகவதி அம்மையை தரிசித்து விட்டு திருவனந்தபுரம் திரும்பும் பிரயாணத்தை மேற்கொண் டோம். வழியில் இந்திரன் மரு நீங்கப் பெற்ற சுவிந்திரம் க்ஷேத்திரத்தில் கடவுள் தரிசனம் வெகு பிரமாதம். இரவு 10 மணிக்கு திருவனந்தபுரத் திலுள்ள எங்களது விடுதியில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டோம். கேரள நாட்டு மக்களின் பண்பாடுகளைக்குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை. எளிய நடையுடை, பணிவு, கடவுள் பக்தி, ராஜ விஸ்வாசம், அமைதி ஆரோக்கியம் முதலிய உயர்ந்த பண்புகளில் சிறந்து விளங்குகிறார்கள். அவர்களது கடவுள் பக்தியே அவர்களது நாட்டை சுபிக்ஷிக்கச்செய்கிறது என்றே சொல்ல வேண்டும்.

மறுநாள் 15—8—55 காலை 8-30 மணிக்குள் கடைத்தெருவு பார்த்துவிட்டு தென்காசி பிரயாணம் துவக்கினோம். குவிலான் ஸ்டேஷ னில் எங்களுக்குக் கிடைத்த சாம்பார், தயிர்சாத பொட்டலங்கள் எங்களை பயமுறுத்தின. ஆனால் நாங்கள் ஒற்றுமையாக விட்டுக்கொடுக்காமல் அவைகளையும் பணியச் செய்தோம். மாலை 5-30 மணிக்கு தென்காசி நிலயத்தில் இறங்கி பஸ் மூலமாக திருக்குற்றாலம் சென்றோம். மலையின் உச்சியிலிருந்து விழும் நீர்வீழ்ச்சியைக்கண்டு புளகாங்கிதமடைந்தோம். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள திருக்குற்றாலம் திகட்டாததொரு ஆரோக்கிய ஸ்தலம். 300 அடி உயரத்திலிருந்து ஐந்து பிரிவாகப்பிரிந்து கொட்டும் நீர்வீழ்ச்சியில் முங்கிமுங்கிக் குளிப்பது உடலுக்கும், உள்ளத் திற்கும் ஒருங்கே சுகமளிப்பது ஜூன்—அக்டோபர் மாதங்களில் இங்கே ஸீஸன். "வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும், மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்" என்ற திருக்குற்றாலக் குறவஞ்சி பாடல் ஞாபகம் வருகிறது. மலையிலும், மரங்களிலும், குரங்கு கள் கொழுத்துக் காணப்பட்டன. சிறந்த மூலிகைகளை மலையின்கண் காணலாம். நீர்வீழ்ச்சியில் நீராடி திருக்குற்றால நாதரின் ஆலயத்தில் வேணியலங்காரர் தரிசனம் செய்தோம். இரவு ஓய்வு பெற்றோம்.

மறுநாள் 16—8—55 காலை முதல் மாலை 4-30 வரையில் ஐந்தருவி, சிற்றருவி, ஜண்பக அருவி முதலிய அருவிகளில் நீராடுவதும், பிறகு உண்பதும் பிறகு நீராடுவதுமாகவே இருந்தோம். மாலை 5-30 மணிக்கு மதுரையம்பதியை நோக்கி பிரயாணம் செய்ய ஆரம்பித்தோம். தமிழ் வளர்த்த மதுரையோ தமிழ் நாட்டின் இருதயமாகும். இரவு சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியில் தங்கினோம். மறுநாள் காலை திருமலை நாயகர் மஹாலைப் பார்வையிட்டோம். எங்கள் பள்ளியுடன் வேறொரு உல்லாசப் பிரயாண கோஷ்டி சேர்ந்துகொண்டது. அந்த சிறுமி களின் வேலைப்பாடுகள் உள்ளத்திற்கு மிக உன்னதமான விருந்தாகும்.

[47-ம் பக்கம் பார்க்க]

# உண்மை நாகரிகம்!

[**எம். கே. மீரான்,** ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு.]

**நா**கரிகம் என்னும் சொல்லின் பொருள் நாட்டு எற்றூர்போல் வேறுபடுகிறது. மக்களின் அறிவுநிலைக்கு ஏற்றூர்போல வேறுபடுகிறது. மேநாடுகளில் இச்சொல் நாகரிக உடை, உணவு, இயந்திரப் பெருக்கம், செல்வச் செறுக்கு ஆகிய உலக பாசத்தின் அடிச்சுவடுகளைக் குறிக்கின்றது. நம் நாட்டிலோ இச்சொல் உண்மையான மனிதத் தன்மையை குறிக்கின்றது. அன்பு, அறிவு, அருள், அடக்கம், ஆண்மை, பெண்மை ஆகியவைகளையே உண்மையான நாகரிகம் என முன்னோர்கள் கருதினர்கள். அதையே அவர்களின் புகழுடம்பு நமக்கு போதிக்கின்றது. இன்று நாம் போலி நாகரிகத்தின் பிடியில் சிக்கி நம் பழம் பெருமைகளையும் முன்னோர்கள் காட்டிச்சென்ற அறவழியையும் மறந்து, வாழ்க்கையில் தன்னம்பிக்கையற்றவர்களாக வாழ்கிறோம்! மகா கவி இரவீந்திர நாத தாகூர் கூறுவது போல் "மனிதன், உணவு, உடை, இயந்திரப் பெருக்கம் செல்வம் இவற்றை எளிதில் அடைதல் கூடுமானல், அந்நிலையில் அவன் நாகரிகன் எனக் கூறுதல் யாங்ஙனம்? அதர்மத்தாலும் கிடைக்கக்கூடிய இப்போக பாக்கியங்கள் மனிதனுக்கு மரணத்தைவிட மா பெரும் கொடுமையாக மாறுகின்றன; இவ்வுலகம் ஓர் பெரிய குடும்பம் எனவும் உலக மக்கள் அனைவரும் அக்குடும்பத்திற்குப் பொறுப்புள்ளவர்களாக இருந்து, தங்கள் கடமையை உணர்ந்து நடப்பதே உண்மையான நாகரிகமாகும்." உலக சமாதானத்துக்காக உழைக்கிறோம் எனப் பெருமிதம் கொண்டு பேசும் இன்றைய வல்லரசுகள் யாது செய்கின்றன. அணுவைப் பிளந்து குண்டுகளைக் கண்டுபிடித்து, நான்கு குண்டுகளைக்கொண்டு உலக ஜீவராசிகள் அனைத்தையும் அழித்துவிடுவோமென்று கூறுகின்றனர்! இதுவா நாகரிகம்? நாகரிகம் வளர்ந்தது உலகை அழிக்கவா? விஞ்ஞானம் வளர்ந்தது மக்களின் நன்மைக்கே அழிவுக்கு அல்ல! என்பதையுணர்ந்து அந்த அறிவை ஆக்கவேலைக்கு பயன்படுத்துவார்களாயின் உலக சுபிட்சத்திற்கு தானே வழியேற்படும்.

மனிதன் தான் பிறந்ததின் நோக்கத்தை உணர வேண்டும். இறைவனை வணங்கவேண்டும். பின் அவனுடன் ஒன்றுசேர வேண்டும் என்பதே நாம் நம் முன்னோர்களிடம் கற்ற உயரிய நாகரிகம் அதை மறந்தோம்! அல்லல்படுகின்றோம்! நாகரிகத்தில் சிறந்தவர்கள் எனக் கூறும் மேநாடுகள் செய்யும் காரியமெல்லாம் நாகரிகமுடையதுதானு? அரசியல் அரங்கிலே ஆணவம் பிடித்த சுயநலக்காரர்களும், பொறுமைக்

கும்பல்களும், நிறத்திமிர் பிடித்தவர்களும் இன்று உலகை ஆட்டிவைக்கின்றனர். இதன் பயன் அணுகுண்டுகள், ஹைட்ரஜன் குண்டுகள். இவைகளில் கோரம், ஒன்றுமறியாத மக்கள் மடிவது. போர் ஏற்படக் காரணமானவர்கள் வேறு; மடிபவர்கள் பாமர மக்கள். இதுவா நாகரிகம் படைத்தோரின் செயல்! இதே நோக்குடன் நம் பழந்தமிழ் நாட்டை நோக்குவோம். மன்னன் ஒருவன் மாற்றரசனுடன் போர் தொடுப்பானாயின் அதற்கோர் தனியிடம்! முதியோர், சிறியோர், ஆனிரை முதலியவர்களை பத்திரமான பாதுகாவலுடன் கூடிய இடங்களுக்கு அனுப்பியபின் இரு மன்னர்களின் சேனைகளும் நேருக்குநேர் நின்று தங்களோடு ஒத்த வீரர்களோடு போரிட்டனர். மன்னர்கள் தாங்களே முன்னின்று தம் வீரர்களை செலுத்தினர் என்றும் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகிறது. இன்றைய வல்லரசுகளைவிட நம் தமிழ் மன்னர்கள் எவ்வளவு நாகரிகம் படைத்தவர்கள் என்று சிந்திக்க வேண்டும். நாம் மேல் நாட்டாரிடமிருந்து நமக்குத் தேவையற்ற சில நாகரிக முறைகளைக் கற்றோம். அது நம்மை இரண்டும் கெட்ட நிலையில் ஆக்கி விட்டது. மேல் நாடுகளில் ஆணும் பெண்ணும் சமமாகப் பழகுகிறார்கள் கட்டுப்பாடு கிடையாது, சம உரிமையிருக்கிறது. அதுபோல் நம் நாட்டிலுமிருந்தால் என்னவென்பது ஒருசிலரின் வினா?

வாழலாம் அவர்களின் எல்லைக்குள், நம் பெண்மணிகள் மிகுந்த நாணம் உடையவர்கள். இவர்களும் தங்களுக்கு ஒத்தவர்களை காதலிக்கிறார்கள், நெருங்கிப் பழகுகிறார்கள். ஆனால் விவாகமெனும் தெய்வீகப் பொன்னாள் வரை தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்கிறார்கள். தன்னுயிர் போயினும் தான்கொண்ட காதலை மறக்கமாட்டார்கள். மேல் நாட்டைப்போல் இன்று ஒருவர் நாளை மற்றவரென்ற முறையே இங்கே கிடையாது. ஆயினும் இருக்கலாம் அத்தன்மையோர் இந்திய பண்பாட்டை பின்பற்றியவர்களாக இருக்க முடியாது!

***'ஓவியர் நீள்சுவர் எழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்***
***தேவியை நான்அழைத்தி. ஆண்சித்திரமேல் நான்பாரேன்***
***பாவையர்தம் உருவெனில் நீர்பார்க்க மனம்பொறேன்.' என்றாள்***

***காவிவிழி மங்கையவள் கற்புவெற்பின் வற்புளதால்!***

என்று கூறுகிறார் ஓர் கவிஞர். எழுதிய சித்திரம் ஆண் உருவானால் தான் பார்க்கமாட்டேன் என்றும் பெண் உருவானால் தன் கணவன் பார்க்கக் கூடாது என்றும் ஒரு தமிழ் நங்கை கூறுகிறாள்! பழந்தமிழ் மக்கள் ஆணும் பெண்ணும் கற்பிற் சிறந்தவர்களாக இருந்தார்கள் என்பது தெள்ளென விளங்குகின்றன. இதுதான் நம் முன்னோர்கண்ட உண்மை நாகரிகம். பண்டு நம் நாடு வளமிக்கப் பொன்னாடாக விளங்கியது. மக்கள் நேர்மையுடனும், அமைதியுடனும் வாழ்ந்துவந்தார்கள் என சரித்திரம் கூறுகிறது இன்று நம்மை போலி நாகரிகம் எலும்புக்கூடு மனிதர்களாக்கிவிட்டது யுவான்சுவாங் இந்தியாவுக்கு வந்த காலத்தில் ஒரு வீட்டின்முன் நின்று நீர் கேட்டபோது ஓர் இந்தியப் பெண்மணி வயிறு நிறைய பால் கொடுத்து பரிமாறினளாம். இன்றளில் சுத்தமான பசுவின் பால் கிடைப்பதே அரிதாகிவிட்டது.

அன்று மக்கள் எந்த வேலையையும் தெய்வ சிந்தனையுடன் செய்து சுகமாக வாழ்ந்தனர்! இன்று தெய்வம் ஓர் சாதாரணப் பொருளாகிவிட்டது அன்று மக்கள் காலையும் மாலையும் போவதை முறையாகக்கொண்டிருந் தார்கள். இன்று கோயிலுக்குப் போவது தங்கள் நாகரிகப் பழக்கத்திற்கு கவுரவக் குறைவெனக் கருதுகின்றனர். தெய்வம் எவனிடம் குடிகொண் டிருக்குமோ அவன்தான் உண்மையான நாகரிகம் உடையவன் என்னும் நம் முன்னோர்களின் உபதேசத்தையும் மறந்து விடுகின்றனர்! ஆனால் ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டாலோ ஒருவருக்கும் தெரியாமல் கடவுளே! கடவுளே! என கதருகின்றனர்; கத்துகின்றனர். தாம் செய்த தவறை உணர்கின்றனர். நினைத்தது நடந்துவிட்டாலோ மறுபடியும் மாறிவிடுகின் றனர். கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் அவனருளால் கிடைத்த அறிவின் பயனால் முன்னேற்றமடைந்த நாகரிகத்தின் பெயரால் கடவுளை வழிபட வெட்கமடைகிறனென்றால் அத்தகைய நாகரிகம் நமக்குத் தேவை யில்லை. நம் நாட்டு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்ரீ தேபார் கூறுவதுபோல ''உதடுக்கு சாயம் பூசும் காலம் இதுவல்ல! இன்னும் இந்தியா வீடு செவ்வனே நடைபெற பல வேலைகள் இருக்கின்றன!'' என்பதைப் போல நம்மிடம் சிக்கிக்கொண்ட போலி நாகரிகத்தை கைவிட்டு, நம் நாட்டிற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற நாகரிக முறையை பின்பற்றி ஓயாது உழைத்து நாடு நலம்பெற பரம்பொருளைப் பணிந்து வணங்குவோமாக!

***வாழ்க பாரதம்! வாழ்க நம் நாகரிகம்!!***

---

***44-ம் பக்கத் தொடர்ச்சி...***

திருப்பரங்குன்றம் முருகப்பெருமானை வழிபட்டோம். அன்று கோவா படுகொலை நாள். கடைகள் யாவும் மூடப்பட்டன பகல் சாப்பாட்டிற்கே திண்டாட்டமாகப் போய்விட்டது. ஏதோ ஒருவிதமாக தலைமை ஆசிரியர் நிலையை சமாளித்தது போற்றத்தக்கது மீனாக்ஷி மில்ஸ், T. V. S. தொழிற் கூடம் ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவில், கோபுரம், மண்டபம், பொற்றாமரைக் குளம் முதலியன கண்டோம். வெளிப்பிரகாரத்திலுள்ள சங்கீதத்தூண்கள் ஒவ்வொன்றும் தட்டினால் ஸப்தஸ்வரம் எழுப்புவது பழங்கால சிற்பிகளின் கைத்திறனைக்காட்டும். என்னே விந்தை! அத்தகைய சிற்பிகள் இப்போது யாங்கு ஒளிந்தனரோ! இரவு 8-45 மணிக்கு திருச்சி வரும் வண்டியில் ஏறி அதிகாலை 3-30க்கு திருச்சி வந்தடைந்தோம். 17–8–55ல் திருச்சி முகாம். ஜகப்பிரசித்திபெற்ற மலைக்கோட்டை கண்டோம். தாயுமான ஸ்வாமி தரிசனம் கிடைத்தது. அண்மையிலுள்ள ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாத ஸ்வாமியை சேவித்தோம். இப்பெரிய கோயிலின் ஏழு மதில்களுக்குள்ளே ஊரின் பல வீடுகளும் அடங்கியுள்ளன. கர்ப்பக்கிருஹத்தின் மீதுள்ள பொன் வேய்ந்த விமானம பார்க்க வேண்டியவற்றிலொன்று. வானொலி நிலையத்தில் ஒலிபெருக்கும் முறையை அறிந்தோம். பகல் 1-30க்கு புறப் பட்டு இரவு 7-20க்கு நாகூர் வந்தடைந்தோம் ஒரு வாரம் வரை நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எங்கள் சகோதர மாணவர்கட்கு எடுத்துக் கூற அவகாசமளித்த தலைமைஆசிரியருக்கு நன்றிகூறி எங்கள் உல்லாசப் பிரயாணத்தை முடித்துக்கொண்டோம்.

***வாழ்க பாரத புண்ய பூமி! வாழ்க தெவிட்டாத தென்னாடு!!***

# பங்கு கொள்வீர்!

[எம். ஜீ. நாகராஜன்]

சுதந்திர இடி இடித்தது. உரிமை மின்னல் மின்னியது. தியாகக் கருமேகங்கள் சூழ்ந்தன. மூவர்ண வானவில் உயர்ந்து எழுந்தது. இன்னமுமா மழை பெய்யத் தாமதமாகும்? ஆம்; தலைவர்கள் பட்ட துன்பம் பஞ்சாய்ப் பறக்க, மக்கள் மனதில் எல்லையில்லா மகிழ்ச்சி பொங்க, சுதந்திர மழை பெய்தது— 1947 ஆகஸ்ட் பதினைந்தில்.

கட்டுண்ட விலங்கையுடைத்துக் கலகலவெனச் சிரித்து மகிழ்ந்தாள் பாரதத்தாய். புழுங்கிய ஆத்திரத்தால் கரடுமுரடாயிருந்த பூதேவியும் சுதந்திர மழை நீர்ப்பட்டு மென்மையாக மாறி மெல்ல நகைத்தாள். பொறுமைகொண்ட பூதேவியும் பூரிப்படைந்து தான் புதைத்திருந்த செல்வங்களைப் பரிசளிக்கிருள் பாரதத் தாய்க்கு. அதனுல் வற்றிய ஆறுகூட வெள்ளம் கொண்டு வந்தது வரண்ட நிலம் வளம் பெற்றது. காடு வளர்ந்து, கழனி செழித்து, நாடு கொழித்து, நலம் பெற்று வாழ சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது தற்பொழுது. பாரத தேசமெங்கும் பரவச ஒளி வீசுகிறது. பட்டிதோறும் கொட்டி முழக்கப்படுகிறது சுதந்திரச் சங்கநாதம். எங்ஙனும் மக்கள் தனி மதிப்புடன் காணப்படுகிருர்கள். ஆம்! சுதந்திரத் திருநாளன்று பிறந்த குழந்தைகூட, சிரித்துக்கொண்டு பிறந்ததாம்! அதற்கல்லவோ அந்த பாக்யம்.

நம் அருந்தலைவர்கள், அன்னியர் ஆதிக்கம் என்ற மரத்தில் அஞ்சாது ஏறி—சட்டம், சிறை என்ற முட்களைச் சட்டை செய்யாது, சுதந்திர பழத்தைப் பறித்துவந்து, பிளந்து திருத்தி, பக்குவமாக, பலாச்சுளையென்னும் பொறுப்பைக் கொடுக்கவிருக்கிருர்கள் இன்றைய இளைஞர்களிடம். அதை நீங்கள் வாங்கி மனம் மகிழ அதன் சுவையைக்காணத் தகுதியில்லாமலா போவது? சுதந்திரச் சிற்பிகள் சளைக்காமல் கறந்து. களைக்காமல் கடைந்து எடுத்த சுதந்திர வெண்ணெயை உங்களிடம் கொடுக்கிருர்கள். அதைக் காய்ச்சி உருக்கி, பக்குவப்படுத்தி, உவகையுடன் உணவில் கலந்து, உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்றதாகச் செய்வதே உங்கள் கடமையாகும். அதற்காக ஐந்தாண்டுத்திட்டங்கள் உங்கள் முன்னிலை

யில் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதுகூடவா செய்யவியலாது இன்றைய இளைஞர்களாகிய உங்களால்?

இப்பொழுது நீங்கள் முள்நீக்கி சுளையெடுக்கும் முயற்சியில் இருக்கவில்லையே! இனிமேல் வெண்ணெய் திரட்டும் வேலையில் ஈடுபடப் போவதில்லை. ஆனால் கிடைத்ததைக் காப்பாற்றும், பெற்றதைப் பேணிவளர்க்கும், பெரும் பொறுப்பிலேயே இருக்கிறீர்கள். ஆம்! இப்புதியத் திட்டங்களே வருங்கால இந்தியாவின் சுபீட்சம், சொர்க்கம், முன்னேற்றம் எல்லாம்! அதற்கான வேலையே தீட்டப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களாகும்.

இதில் உங்களுக்கு மிகுந்தபொறுப்பு இருக்கிறது. இதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதற்கு முதலில் உங்களை தகுதிப்படுத்திக்கொள்ளல் மிக முக்கியம். அதற்கான அறிவுரைகள் அகன்ற அனுபவம் வாய்ந்த நம் அரும்பெருந் தலைவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதேயாம். உங்கள் பண்புகளை பண்படுத்திக்கொள்ள, தியாகச்சீலரான, மலர் தலை ஞாலத்து மங்காப் புகழ்பெற்ற மகாத்மாவின் உயர்ந்த நற்குணங்களே உங்களுக்கு சாலச்சிறந்தது. அன்பு, அஹிம்சை, பொறுமை, சுயநலமின்மை, சகோதர உணர்ச்சி, தேசத் தொண்டு, மன்னிக்கும் மனப்பான்மை போன்ற உத்தம குணங்களை நீங்கள் மெருகேற்றிக்கொள்ளுங்கள். உங்களை நம்பியுள்ள பாரதத் தாய்க்கு இழுக்கு ஏற்படாதவாறு அவளுக்குப் புகழ் தேடித்தர, நீங்கள் அவ்வுத்தமக்கொள்கைகளையெல்லாம் உளம் கொள்ள வேண்டாமா? பெரியோர்களின் பொற்குணங்களை நீங்களெல்லாம் பெற்றபோதல்லவா, விலங்கு கழற்றியதாய் பெருமகிழ்ச்சியும் மனநிம்மதியும் பெறுவாள்! உங்களை உலகத்தார் உயர்வாகப் பேசும் போது அதுகேட்டு பாரதத்தாய் எவ்வளவு ஆனந்தம் அடைவாள் தெரியுமா?

அன்னவர்களின் அருங்குணங்களை அடைவதென்பது கடினமானதல்லவே! நீங்கள் திரண்ட தோளைப்பெற்றது போர் புரிவதற்காக அல்ல. மிகுந்த தேசப்பொறுப்பைத் தூக்குவதற்குத்தான். பரந்த மார்பைப்பெற்றது கூரிய அம்பைத்தாங்க அல்ல; தன்னம்பிக்கை கொண்ட நெஞ்சைத் தாங்குவதற்கு. உறுதியான உடலைப்பெற்றது ஊடுருவிச்சென்று பகைவனைத் தாக்க அல்ல; ஓடோடியும்சென்று தேசப்பணி புரியவே. சிறந்த மூளையைப் பெற்றது அழிவுக் காரியத்திலீடுபட அல்ல; ஆக்க வேலைக்காகவே. ஆம்! பாரதத்தைப் புதுப்பிக்கவே உங்கள் மூளைக்கு அதிக வேலை இருக்கிறது. பெற்ற சுதந்திர மழை நீரைச் சேதமாக்காது தேக்கி, நம் வாழ்வு வயல்களில் பாய்ச்சி சுபீட்சப் பயிர்களை வளரச்செய்யுங்கள்.

அதற்காக வேண்டியே அறிஞர்கள் அல்லும் பகலும் உழைத்து, தங்கள் அறிவுத்திறனைக் காட்டுகின்றார்கள். எதற்காக? அன்னைநாட்டை அதிக வளமாக்க. வல்லுணர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றார்கள் எதற்காக? வறுமையெனும் கொடுமையை ஒழிக்க. நிபுணர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் கொட்டுகின்றனர். ஏன்? நிர்மாணத்திட்டங்களைத் தீட்டி இந் நாட்டைப் பொன்னுடாக்க. சர்க்காரோ பணத்தை வாரி வாரி வழங்கி நம் வாழ்வை வளமாக்கி, கோடி கோடியாய்க்கொட்டி நம் குடும்ப நிலையுயர்த்தி, வெள்ளி வெள்ளியாய் வீசி நம் இருண்ட வாழ்வில் விடிவெள்ளி கிளப்பிப்பார்க்க விழைகிறது.

இப்பொழுது சண்டை சமயமல்ல, சமாதானப் பேச்சு எங்கனும் பேசப்படுகிறது. சமாதானத்தேவதையும் புன்னகை புரிகின்றாள் 'இப்பொழுதாவது யுத்த வெறியர்களுக்கு மனம் திருந்தியதே என நினைத்து. மேலும், 'இவற்றிற்கெல்லாம் மூல காரணம் என் கண்மணி நேர்மையாளன் அல்லவா' என்றும் தம் மனத்துள் எண்ணி உளம் பூரிக்கிறாள். மேற்சொல்லியது முற்றிலும் உண்மையே. சமாதானத் தனயன் நேருஜீ என்றால் அது மிகையாகாது. அவர் எப்பொழுதும் இளைஞர் கட்சியின் பக்கமே ஆகவே அவரின் பூரண ஆதரவு உண்டு இந்திய இளைஞர்களாகிய உங்கட்கு நீங்களெல்லாம் வருங்கால இந்தியாவை ஆளப்போகும் இளவரசுகள் அல்லவா?

ஆராய்ந்து பார்ப்பின், நீங்கள் செல்ல வேண்டிய வழி காந்தியப்பாதை செய்யவேண்டிய பணி ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெறச் செய்வதே. ஏனெனில் ஐந்தாண்டுத் திட்டமே பாரதத்தின் சுபீட்சப்பாதை; முன்னேற்றத்தின் ஏணி; பயன் தரும் கற்பக விருட்சம்; இருண்ட வாழ்வை மிளிரச் செய்யும் தீப ஒளி. ஆகவே இளைஞர்களாகிய நீங்கள் இத்திட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு பணியாற்றுவதே பாங்கான வழியாகும். திட்டத்தை மேற்கொள்ளுதலே நேர்மை பெறக்கூடிய செயலாகும். தேசத்தொண்டே சிறந்த தொண்டு என்பதை நினைவிலிருத்துங்கள். எனவே நீங்கள் உங்களது கடமையைச் செய்து உரிமையைப் பெறுங்கள். அதற்கு நீங்கள் வேற்றுமை நீக்கி, ஒற்றுமைக்கூட்டி, பொறுமையைப் பொசுக்கி, பெருமையைக்காட்டி, அன்பைக் கலந்து இந்நாட்டின் பண்பையுணர்த்தி நீங்கள் நடத்தையில் நல்மாணிக்கங்களாய், ஒழுக்கத்தில் உயர் இரத்தினங்களாய் இவ்வையம் புகழ பாரதத் திருச்செல்வங்களாய் வாழ்மின். சமாதானத்தேவி என்றென்றும் உங்களின் நிரந்தரத்தேவி. பாரதத்தாய் என்றும் உங்கள் பாசத்தை வளர்த்த தாய். கருணைக்காந்தி என்றைக்கும் உங்கட்கு நல்வழி காட்டும் காவலன். 'நிகரில்லா நேருஜீ உங்கள் நேர்மூத்த நிர்மலன். "**நும் கடன் பணி செய்து கிடப்பதே.**"